Follow us:

# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 155 குரோதி வருடம், தை மாதம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(24.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 23, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

## தரம் - 5 பெறுபேறுகள் வெளியாகின

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான (2024) பெறுபேறுகள் நேற்று (23) வெளியாகின. அதற்கமைய, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளங்களான www.doenets.lk மற்றும் www.results.exams.gov.lk ஆகியவற்றில் உள்நுழைவதனூடாக பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



வெட்கமிருந்தால் வெளியேறவாம்.. அமைச்சர் சொல்லுறார்.. வெட்கமெல்லாம் பார்த்தால் அரசியல் செய்ய முடியுமோ?

## ரணில் - சஜித் கூட்டணி பேச்சுவார்த்தை வெற்றி



எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து செயற்படுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இந்நிலையில், அடுத்துவரும் கலந்துரையாடல்களில், எதிர்வரும் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் தொடர்ச்சியான... » 02 பக்கம்

## நான் புலியென்றால் சுட்டுத்தள்ளுங்கள்!

### அர்ச்சுனா எம்.பி. சபையில் ஆவேசம்



அரசாங்கத்துக்கு தான் வழங்கும் ஆதரவை முற்றாக விலக்கிக்கொள்வதாகத் தெரிவித்த யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு 17இன் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், இனி தான் உண்மையான எதிர்க்கட்சி உறுப்பினராக இருப்பேன் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சிறப்புரிமை பிரச்சினையை... » 02 பக்கம்

## பேரீச்சம்பழங்கள் நன்கொடை

### - சவூதி வழங்கியது -

எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம்களின் நுகர்வுக்காக சவூதி அரேபியா 50 மெற்றிக்தொன் பேரீச்சம்பழங்களை இம்முறை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. பேரீச்சம்பழங்கள் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்துள்ளார்.

அவற்றை பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

இம்முறை ஹஜ் கடமைக்காக 3,500 இலங்கையர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கமும் சவூதி அரசாங்கமும் அண்மையில்...

» 02 பக்கம்



# சலுகைகளில் வெட்டு!

## அரச செலவினத்தை குறைக்க ஜனாதிபதி செயலர் அதிரடி

■ நா. தினுஷா

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் அலுவலக செயற்பாடுகளுக்காக வழங்கவேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை, வாகனங்களுக்கான எரிபொருள் செலவு, தொலைபேசிகளின் எண்ணிக்கை, தொலைபேசிகளுக்கான கட்டணங்கள் மற்றும் அவர்களின் பணிக்குழாமுக்கு நியமிக்கப்படக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கை, அவர்களுக்கான சலுகைகள் என்பவற்றை மட்டுப்படுத்த ஜனாதிபதி செயலகம் திடீர் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான ஆலோசனைகள் அடங்கிய சுற்றறிக்கை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ்.குமாநாயக்கவினால் அமைச்சுகளின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சகல வரையறைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டியது ... » 02 பக்கம்

## எம்.பிக்களின் உணவு விலை அதிகரிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உணவு விலையை 450 ரூபாவிலிருந்து 2,000 ரூபாவாக உயர்த்துவதற்கு பாராளுமன்ற பராமரிப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை திருத்தத்தின்படி, எம்.பியொருவரின் தினசரி காலை உணவுக்கு 600 ரூபாவும் மதிய உணவுக்கு 1,300 ரூபாவும் மாலை தேநீருக்கு 100 ரூபாவும் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற பராமரிப்புக் குழுவின் உறுப்பினரான பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 01ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும்... » 02 பக்கம்

## வெட்கமிருந்தால் வெளியேறுங்கள்!

### அரச இல்லங்களில் உள்ளோரை கோருகிறார் அமைச்சர் நளிந்த



''முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வெட்கம் என்பதொன்று இருக்குமானால் அரச இல்லங்களிலிருந்து வெளியேற வேண்டும். ஆனால், இவர்களுக்கும் வெட்கமில்லை, இவர்களின் பிள்ளைகளுக்கும் வெட்கமில்லை'' - எனத் தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும்...

» 02 பக்கம்

## வவுனியா பெண் தற்கொலையே செய்துகொண்டார்

### அமைச்சர் விஜேபால அறிவிப்பு



''மருதானை பொலிஸ் நிலையத்தில் வவுனியா பெண் தற்கொலை செய்யவில்லை. கொலை செய்யப்பட்டுள்ளார் என தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பி. சிறிதரன் தெரிவித்தார்.

» 02 பக்கம்




» 03பக்கம்



## இள வயது பெண்களின் மத்தியில் நுரையீரல் புற்றுநோய் அதிகரிப்பு

### சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

■ நா. தினுஷா

இள வயது பெண்களின் மத்தியில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக பெண்கள் மத்தியில் புகைத்தல் பயன்பாட்டு வீதம் அதிகரித்துள்ளதன் காரணமாக இவ்வாறு நுரையீரல் புற்றுநோய் அதிகரித்து வருவதாக தேசிய சுவாச விஞ்ஞான நிறுவனத்தின் விசேட சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்தியர் சமன் இத்தகொட தெரிவித்துள்ளார்.

» 02 பக்கம்



## சீமான் - பிரபாகரன் புகைப்பட சர்ச்சை

» 10 பக்கம்



## பால் மற்றும் சம்பலுக்காக வீணடிக்கப்படும் தேங்காய்

### பிரதியமைச்சர் அபேசிங்க கவலை



வீட்டுத் தேவைக்காக பயன்படுத்தப்படும் தேங்காய்கள், உணவு... » 02 பக்கம்

## தரம்-5...

மாவட்ட அடிப்படையிலான தமிழ் மொழிமூல பரீட்சை வெட்டுப்புள்ளிகளானது பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு – 141, கம்பஹா - 141, களுத்துறை 141, கண்டி -141, மாத்தளை – 141, நுவரெலியா – 139, காலி – 141, மாத்தறை – 141, ஹம்பாந்தோட்டை – 139,யாழ்ப்பாணம் - 139, கிளிநொச்சி – 139, மன்னார் - 138, வவுனியா – 139, முல்லைத்தீவு – 138, மட்டக்களப்பு – 139, அம்பாறை – 139, திருகோணமலை – 138, குருநாகல் - 141, புத்தளம் - 138, அநுராதபுரம் - 138, பொலனறுவை – 138, பதுளை – 139, மொனராகலை – 138, இரத்தினபுரி – 136, கேகாலை – 141 என்ற அடிப்படையில் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

## இள வயது...

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையை பொறுத்தவரையில், புற்றுநோய்களினால் பாதிக்கப்படுபவர்களில் நுரையீரல் புற்றுநோயினால் பாதிப்படைபவர்கள் இரண்டாவது இடத்தைக் கொண்டிருந்தார்கள். இந்த புற்றுநோய் ஆண்களின் மத்தியிலேயே அதிகரித்துக் காணப்பட்டது.

ஆனால், தற்போது பெண்களின் மத்தியில் ஏற்படும் புற்றுநோய் வகைகளின் முதல் ஐந்து வகையான புற்றுநோய்களில், நுரையீரல் புற்றுநோயும் ஒன்றாகிவிட்டது. 60 – 70 சதவீதம் வரையிலான பெண்கள் இந்த நுரையீரல் புற்றுநோயினால் பாதிப்படைகிறார்கள். சத்திர சிகிச்சையினூடாக மருத்துவ நிவாரணம் வழங்கினாலும் அதனை சுகப்படுத்த முடியாத நிலைமை நிலவுகிறது. 10 அல்லது 15 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. ஆனால் தற்போதுள்ள நிலைவரங்களில் ஆண்களின் மத்தியில் புகைத்தல் வீதம் குறைவடைந்துள்ளதை ஆய்வு அறிக்கைகளில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆய்வு அறிக்கைகளின் பிரகாரம், துரதிர்ஷ்டவசமாக பெண்கள் மத்தியில் புகைத்தல் வீதம் அதிகரித்து வருகிறது. தற்போதைய தரவுகளின் அடிப்படையில் இள வயது பெண்கள் நுரையீரல் புற்றுநோய்க்குள்ளாகும் எச்சரிக்கை நிலைமை நிலவுகிறது. இந்த நிலைமை முழு ஆசிய வலயத்திலும் இருக்கிறது. இதுதொடர்பான மேலதிக ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வவுனியா...

எனினும் இது தற்கொலை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது'' - என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த சிறிதரன் எம்.பி. கூறுகையில்,

மருதானை பொலிஸ் நிலையத்தில் வவுனியாவை சேர்ந்த பெண் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால் அவர் தற்கொலை செய்யவில்லை. கொலை செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையத்துக்குள் அவர் எவ்வாறு தற்கொலை செய்து கொள்ள முடியும், கைது செய்யப்பட்ட ஒரு கைதியான அவர் எவ்வாறு மரணத்தை தழுவ முடியும்?

இது ஒரு பயங்கரமான செய்தி. எனவே இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, நீங்கள் முன்வைத்துள்ள இந்த விடயம் தொடர்பில் இன்றைய தினத்துக்குள் (நேற்று) ஆராய்ந்து உங்களுக்கு பதில் வழங்குவேன் என்றார்.

பின்னர் இதற்கு பதில் வழங்கிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால,

வவுனியாவை சேர்ந்த குறித்த பெண் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தப் பெண் ஐந்து வழக்குகளில் பிரதிவாதியாக இருந்து பிடியாணையில் கடந்த 21ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றைய தினத்தில் (நேற்று முன்தினம்) துரதிர்ஷ்டமான சம்பவம் நடந்துள்ளது. பிரேத பரிசோதனை இன்று (நேற்று) நடைபெற்றது. அதில் அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்பது உறுதியாகியுள்ளது என்றார்.

இதேவேளை, ரோஹிங்யா அகதிகள் தொடர்பில் மனிதாபிமான அடிப்படையிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது என்றும் இந்த விடயத்தில் நாட்டின் சட்டதிட்டங்கள் பின்பற்றியே தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெட்கமிருந்தால்...

விஜேராம மாவத்தை வீடு 3,128 மில்லியன் ரூபா பெறுமதியானது. 46 இலட்சம் ரூபா மாத வாடகை கொண்டதெனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2413/37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் உட்பட பல கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஆகியோர் பராமரிக்கும் பொறுப்பிலிருந்து நாட்டு மக்களை விடுத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கொழும்பு -05 பகுதியில் வீடு ஒன்று ஒதுக்கப்பட்டது. இந்த வீட்டின் நடைமுறை சந்தை பெறுமதி 2598.5 மில்லியன் ரூபா. நடைமுறை மாத வாடகைக் கட்டணம் 1,275,000 ரூபா இந்த வீட்டிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு -07 பெஜட் பகுதியில் வழங்கப்பட்டிருந்த வீடு 3,132 மில்லியன் ரூபா பெறுமதியானது. இதன் நடைமுறை சந்தை மாத வாடகைக் கட்டணம் 29 இலட்சம் ரூபா. இந்த வீட்டிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவும் வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாச கொழும்பு -07 இல் உள்ள அரசாங்கத்துக்கு சொந்தமான வீட்டில் வசித்தார். தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு -07 பகுதியில் 1005.5 மில்லியன் ரூபா பெறுமதியான வீடு வழங்கப்பட்டது. அவர் இன்னும் அந்த வீட்டில் தான் வசிக்கிறார். அந்த வீட்டின் நடைமுறை சந்தை மாத வாடகை 09 இலட்சம் ரூபா.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் விஜேராம மாவத்தை வீடு தொடர்பில் குறிப்பிட்டதன் பின்னர் மஹிந்தவின் வீட்டை பாதுகாப்போம் என்று அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வீடு 01 ஏக்கர் 13.8 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 3,128 மில்லியன் ரூபா பெறுமதியானது. 46 இலட்சம் ரூபா மாத வாடகை பெறுமதியானது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வசிக்கும் வீட்டின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை. அவர் நாடு திரும்பியதும் வீட்டை மதிப்பிடுமாறு குறிப்பிட்டுள்ளார். ஆகவே வெகுவிரைவில் அந்த வீட்டின் பெறுமதி தொடர்பான விபரங்கள் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகள் வசிக்கும் வீடுகளை பராமரிப்பதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்கும் மக்களின் வரிப்பணமே பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் வீட்டுக்கு பெருமளவிலான நிதி செலவிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு 33 இலட்சம் ரூபா, 2022ஆம் ஆண்டு 3,45,000ரூபா, 2023ஆம் ஆண்டு 18.மில்லியன் ரூபா, 2024ஆம் ஆண்டு 09 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டுமுதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விஜேராம மாவத்தையில் உள்ள அரச இல்லத்தில் வசித்துள்ளார். இக்காலப்பகுதியில் மாத்திரம் அந்த வீட்டை பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் 430 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் ஏன் முன்னாள் ஜனாதிபதிகளையும் அவர்களின் குடும்பத்தாரையும் பராமரிப்பதற்கு பணம் செலவழிக்க வேண்டும்? வெட்கம் என்பதொன்று இருக்குமானால் இவர்கள் இந்த வீடுகளை விட்டு வெளியேற வேண்டும். வீடுகளில் இருப்பவர்களுக்கும் வெட்கமில்லை, அவர்களின் பிள்ளைகளுக்கும் வெட்கமில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். ஒருவர் கடற்படையில் இருந்ததாகவும் பிறிதொருவர் விஞ்ஞானி என்றும் குறிப்பிடப்படுகிறது. பெற்றோரை பார்த்துக் கொள்ளும் பொறுப்பு பிள்ளைகளுக்கு உண்டு. ஆகவே முன்னாள் ஜனாதிபதிகள் அவர்களின் பிள்ளைகள் கவனித்துக் கொள்ள வேண்டும். முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அரச இல்லங்களை விட்டு வெளியேற வேண்டுமென பிரத்தியேகமாக குறிப்பிடத் தேவையில்லை. வெட்கம் என்பதொன்று இருக்குமானால் இவர்கள் வெளியேற வேண்டும் என்றார்.

## பால் மற்றும்...

தயாரிப்பின்போது பால் மற்றும் சம்பலுக்காகவும் பயன்படுத்தப்படுவதனூடாக தேங்காய் பெரிதும் வீணடிக்கப்படுவதாகவும் தேங்காய் பாலுக்கு பதிலாக பயன்படுத்தக் கூடிய மாற்று உற்பத்திகளுக்கு மக்கள் முக்கியத்துவம் வழங்கினால் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பல்வேறு காரணங்களினால் தென்னை மரமொன்றில் கிடைக்கும் மொத்த தேங்காய்களின் சராசரி எண்ணிக்கை 50 ஆக மட்டுப்பட்டுள்ளது. இந்த சராசரி எண்ணிக்கையின் மத்தியிலேயே 3,100 மில்லியன் வரையான தேங்காய்களை 2023ஆம் ஆண்டில் உற்பத்தி செய்துள்ளோம். 2024 ஆம் ஆண்டில் 3,300 மில்லியன் உற்பத்திகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்வு கூறப்பட்டிருந்தாலும் கடந்த வருடம் 2,600 மில்லியன் தேங்காய்களே மீதமாகியிருந்தன.

இந்த தேங்காய்களில் 1,800 மில்லியன் தேங்காய்களை வீட்டுத் தேவைகளுக்கு பயன்படுத்துகிறோம். அதில் மீதப்படும் தொகையில் ஓரளவு தொகையை தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு எடுக்கிறோம். மிகுதித் தொகையை ஏற்றுமதிக்கு பயன்படுத்துகிறோம்.

தேங்காய் பால் அல்லது தேங்காய் சார்ந்த ஏற்றமதிகளுக்கான பெறுமதி 27- 30 பில்லியன் டொலர் பெறுமதியாக இருக்கிறது. 1.5 பில்லியன் டொலர் எல்லையை அடையவே ஏற்றுமதியாளர்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால், தேசிய நுகர்வுக்கான தேங்காயை பெற்றுக்கொள்ளுதல் அதிலிருக்கும் விநியோகமும் வீழ்ச்சியடைந்து தேங்காய்க்கான விலையும் அதிகரித்து ஏற்றுமதி பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு மாற்றுறத்திட்டங்களை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

இதேவேளை, வீட்டுப்பாவனையின் போது தேங்காய் பெரிதும் வீணடிக்கப்படுகிறது. உணவு தயாரிப்பின்போது தேங்காய் பால் மற்றும் தேங்காய் பூவை தேங்காய் சம்பளுக்காகவும் பயன்படுத்துகிறோம். அதனூடாக தேங்காய் பெரிதும் வீணடிக்கப்படுகிறது. தேங்காய் சிரட்டை மற்றும் தேங்காய் நீர் என்பனவும் டொலர் உழைக்கக் கூடிய மூலப்பொருட்களாகும். அவையும் வீணடிக்கப்படுகின்றன.

எனவே, தேங்காய் பாலுக்கு பதிலாக பயன்படுத்தக் கூடிய மாற்று உற்பத்திகளுக்கு முக்கியத்துமளிப்பதனூடாக மீதமாகும் தேங்காய்களையும் ஏற்றுமதி செய்ய முடியும். தொழிற்றுறைக்கு தேங்காய்கள் வழங்கப்படுமெனில் தேங்காய் பால், தேங்காய் சிரட்டை, நீர் என்பன ஏற்றுமதி பொருட்களாக மாறும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## சலுகைகளில்...

அமைச்சுகள் செயலாளர்களின் பொறுப்பு என்பதுடன் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கமைய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் அலுவலகம், அமைச்சரவை ஆலோசனைக் குழு மற்றும் அமைச்சர்களின் பிரதி அமைச்சர்களின் உதவி பணியாளர் குழாம் என்பவற்றை உடனடியாக ஸ்தாபித்து அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி செயலாளரினால் கடந்த 21ஆம் திகதி அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சர்களின் பணிக்குழாம் அதிகாரிகளின் எண்ணிக்கை 15 ஆகவும் பிரதி அமைச்சர்களின் பணிகுழாம் அதிகாரிகளின் எண்ணிக்கை 12 ஆகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதிகபட்சமாக, அமைச்சர்களுக்கு இரு வாகனங்கள் மாத்திரமே வழங்கப்படும் என்பதுடன் மாதாந்தம் 900 லீற்றர் எரிபொருளுக்கான நிதி மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்படும். ஒரு தொலைநகல் உட்பட நான்கு தொலைபேசிகள் மாத்திரமே வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலாளர் அமைச்சுகளுக்கு அறிவித்திருக்கிறார்.

இந்த சுற்றறிக்கையில் மேலும்,

தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளது வளமான நாடு – அழகிய வாழ்க்கை என்ற கொள்கைப் பிரகடனத்திலுள்ள உள்ளடக்கங்களை நடைமுறைத் திட்டங்களினூடாக அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது அரச உத்தியோகத்தர்களின் கடமையும் பொறுப்புமாகும். தமது அனுபவத்தையும் திறமையையும் நாட்டின் அபிவிருத்திக்காக பெற்றுக்கொடுப்பதற்கு முன்னிலையாகியுள்ள நிபுணர்கள், தொழில் நிபுணர்கள் மற்றும் அனுபவம் கொண்ட நபர்களை ஆட்சி வியூகத்துக்குள் இணைத்துக்கொள்வதனூடாக மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்தியை விரைவில் அடைந்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதற்கமைய, அமைச்சுகளுக்கான ஆலோசகர்களை நியமித்தல் மற்றும் விசேட ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அமைச்சின் செயலாளர்களின் கடமையாகும்.

மேலும், அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அவர்களின் பணிகளை மிகவும் வினைத்திறனாகவும் சகலத் தரப்பினருடனும் மிக இணைந்து முன்னெடுத்துச் செல்வதற்காக உதவி பணியாளர் சபையை நியமிக்க வேண்டும். அந்தப் பணியாள் பிரிவின் பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ள அதிகபட்ச எண்ணிக்கைக்கு அப்பால் நியமிக்கப்படக் கூடாது.

அதற்கமைய, அமைச்சர் ஒருவருக்காக பிரத்தியேக செயலாளர் ஒருவர், இணைப்புச் செயலாளர்கள் இருவர், ஊடகச் செயலாளர் ஒருவர், பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி ஒருவர், பிரத்தியேக உதவியாளர் ஒருவர், முகாமைத்துவ உதவியாளர்கள் ஐவர், அலுவலக பணிகளுக்கான உதவியாளர்கள் இருவர், சாரதிகள் இருவர் உள்ளடங்களாக மொத்தமாக 15 பணியாளர்களை மாத்திரமே நியமிக்க முடியும்.

அதேபோன்று, பிரதி அமைச்சர் ஒருவருக்கு பிரத்தியேக செயலாளர் ஒருவர், இணைப்புச் செயலாளர்கள் இருவர், ஊடகச் செயலாளர் ஒருவர், பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி ஒருவர், முகாமைத்துவ உதவியாளர்கள் மூவர், அலுவலகப் பணிகளுக்கான உதவியாளர்கள் இருவர், சாரதிகள் இருவர் உள்ளடங்களாக மொத்தமாக 12 பணியாளர்களை மாத்திரமே நியமிக்க முடியும்.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பாவனைக்காக அதிகப்பட்சம் இரு உத்தியோகப்பூர்வ வாகனங்களையே வழங்கமுடியும். அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பாவனைக்காக அரச கூட்டுத்தாபனங்கள், சட்டபூர்வ நிறுவனங்கள் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களை பயன்படுத்துதல் அல்லது தனியார் மூலமாக வாடகையின் அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்வதென்றால், அதற்கான பொறுப்பை அமைச்சின் செயலாளர் ஏற்கவேண்டும். தனியார் மூலமாக வாடகைக்கு வாகனங்களை பெற்றுக்கொள்ளும்போது அதற்கான செலவு அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைக்குள் உள்ளடங்கும் வகையில் பேணுவதற்கு பிரதான கணக்கறிக்கையாளர் என்ற அடிப்படையில் அமைச்சின் செயலாளரே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் உத்தியோகப்பூர்வ வாகனம் அல்லது வாகனங்களுக்காக ஒரு மாதத்துக்கு அதிகபட்சம் 900 லீற்றர் எரிபொருளுக்கான தொகையே ஒதுக்கீடு செய்யப்படும். மேற்குறிப்பிட்ட பிரத்தியேக செயலாளர், இணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர், பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி ஆகியோருக்கு ஒரு உத்தியோகப்பூர்வ வாகனத்துக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படும்.

அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் அதிகப்பட்ச உத்தியோகபூர்வ கடமைக்கான தொலைபேசிகளுக்கும் மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அலுவலக செயற்பாடுகளுக்கு இரு தொலைபேசி, வீட்டுக்கு ஒரு தொலைபேசி, கைபேசி ஒன்று, அலுவலக தொலைநகல் ஒன்று என்ற அடிப்படையிலேயே விநியோகிக்கப்பட வேண்டும்.

மேலும், அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பணிகுழாமிலுள்ள பிரத்தியேக செயலாளருக்கு ஒரு அலுவலக தொலைபேசியும் ஒரு கைபேசியும் ஒரு அலுவலக தொலைநகலும் வழங்கப்பட வேண்டும். இணைச் செயலாளர் ஒருவருக்கு ஒரு அலுவலக தொலைபேசி, ஒரு கைபேசி என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் ஊடகச் செயலாளர் ஒருவருக்கு அலுவலக தொலைபேசி ஒன்று, கைபேசி ஒன்று மற்றும் அலுவலக தொலைநகல் ஒன்றும் வழங்கப்படுதல் அவசியம். அத்துடன் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரிக்கு ஒரு அலுவலக தொலைபேசியும் கைபேசியொன்றும் விநியோகிக்கப்படுதல் அவசியமாகும்.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான தொலைபேசிகளுக்கான மாதாந்த நிலையான கட்டணம் வரிப்பணம் இல்லாமல் 10,000 – 20,000 ரூபாவுக்குள் அமைய வேண்டும். அலுவலக மற்றும் இல்ல தொலைபேசிகளுக்கான மாதாந்தம் 20,000 ரூபாவும் கைபேசிகளுக்காக 10,000 ரூபாவும் என்ற வரையறைக்குள் மாத்திரமே பயன்படுத்த முடியும்.

அதேபோன்று, அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பணிக்குழாமிலுள்ள பிரத்தியேக செயலாளர்களின் தொலைபேசிக் கட்டணம் 6,000 ரூபாவாகவும் இணைப்புச் செயலாளருக்கான தொலைபேசிக் கட்டணம் 5,000 ரூபாவும் ஊடகச் செயலாளரின் தொலைபேசிக் கட்டணம் 5,000 ரூபாவும் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரியின் தொலைபேசிக் கட்டணம் 5,000 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த தொகையை விட குறைந்த கட்டணம் தொலைபேசி பாவனைக்கு பயன்படுத்தப்பட்டிருக்குமாக இருந்தால் தொலைபேசிக் கட்டணத்துக்காக அதிக செலவு செய்யப்பட்டுள்ள மாதத்துக்கான கணக்குகளில் கழிக்கப்படும் என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த சுற்றறிக்கையின் பிரதியானது பிரதமர், செயலாளர், அமைச்சரவை செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், கணக்காய்வாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## பேரச்சம்பழங்கள்...

கையெழுத்திட்டதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்தார். இதற்கமைய எதிர்வரும் ஜூன் முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ள யாத்ரீகர்கள் ஹஜ் கடமையை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டுள்ள ஹஜ் யாத்திரீகர்களுக்கான சகல வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் கூறியுள்ளார்.

## ரணில்...

பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி மேலும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் நேற்று முன்தினம் (22) மாலை இடம்பெற்றிருந்தது.

இந்த பேச்சுவார்த்தையின்போது பல்வேறு பொது இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கு அப்பால், கட்சித் தலைவர்கள் இருவரும் சந்தித்து இந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் கலந்தாலோசித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் இணைந்து செயற்படுவதா இல்லையா என்பது தொடர்பில் இன்னும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை. ஆரம்பகட்டமாக ஒரே நிலைப்பாட்டில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பிலேயே தற்போது பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த புதிய கூட்டணியில் எதிர்காலத்தில் ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

இருந்தபோதும் கூட்டணிக்கான சின்னம், பெயர் என்பன தொடர்பில் இன்றும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன் கூட்டணியின் தலைமைத்துவம் தொடர்பிலும் இன்றும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

## எம்.பிக்களின்...

வகையில் இந்த விலை அதிகரிப்பு செயற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கு முன்னர் எம்.பியொருவரின் காலை உணவுக்கு 100 ரூபாவும் மதிய உணவுக்காக 300 ரூபாவும் மற்றும் மாலை தேநீருக்காக 50 ரூபாவும் அறவிடப்பட்டது.

இந்நிலையில், எம்.பிக்களின் உணவு செலவு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைக்கமைய, அதன் விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவகத்தில் விருந்தினரை உபசரித்தால் ஒரு எம்.பியிடமிருந்து அறவிடப்படும் மேலதிக கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பிலோ மற்றும் பாராளுமன்ற ஊழியர்களின் உணவு விலையை அதிகரிப்பது தொடர்பிலோ எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

## பெயர் மாற்றம்

இல.74/4 பொல்வத்த பறகஹதெனிய முகவரியில் வசிக்கின்ற என்னுடைய பிறப்புச் சான்றுப் பத்திர இலக்கமான 3966 மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கமான 703022723V ஆகிய ஆவணங்களில் இஸ்மாயில் முஹம்மது நிஜாம் எனும் பெயரில் தவறுதலாகப் பதிவாகியுள்ளது. இன்று முதல் எனது பெயரை முஹம்மது இஸ்மாயில் முஹம்மது நிஸாம் என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனி வரும் சகல ஆணவங்களிலும் எனது புதிய பெயரைப் பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் எனவும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**முஹம்மது இஸ்மாயில் முஹம்மது நிஸாம்**

## நான்...

முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அர்ச்சுனா இராமநாதன் எம்.பி. கூறுகையில்,

பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 64 நாட்கள் கடந்துள்ளன. இந்நிலையில் எனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்ற முறைப்பாட்டுக்கு 36 நாட்கள் கடந்துள்ளன. பாராளுமன்றத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்படுபவர் மக்களின் பிரச்சினைகளை கதைப்பதற்காக இங்கே நேரம் ஒதுக்கப்பட வேண்டும். நான் முறைப்பாடு செய்து 36 நாட்களின் பின்னரும் எனக்கு பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை என்பதனை கூறுவதற்காக இன்று சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எனது முறைப்பாட்டின் பின்னர் மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எனக்கு அடித்தார் என்பதற்காக குழு அமைக்கப்பட்டது. அந்த முறைப்பாடு அன்றே முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் கூறிய விடயம் தொடர்பில் குழு அமைக்கப்படவும் அதற்கான கேள்விகளும் கேட்கப்படவில்லை.

66 நாட்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இடமளிக்கப்படவில்லை என்றால் அது அரசாங்கத்தின் வெட்கம் கெட்ட செயலாகும். ஏன் சாதாரணமான சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினருக்கு இவர்கள் பயப்பட வேண்டும். ஏன் அவர்கள் அது தொடர்பான குழுவொன்றை அமைக்க முடியாதுள்ளனர்.

1976ஆம் ஆண்டில் தந்தை செல்வநாயகம் ஒரு விடயத்தை தெளிவாகக் கூறியுள்ளார். இரண்டு சமூகங்களுக்கு இடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் ஒரு சமூகம் இன்னுமொரு சமூகத்தை மதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். 36 நாட்கள் எனக்கு பேச இடமளிக்காது எனது சொந்தப் பிரச்சினையை பேச வேண்டிய நிலைமையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. இன்றிலிருந்து இந்த அரசாங்கத்துக்கு எனது மனதால் கொடுக்கும் ஆதரவை நீக்கிக்கொள்கின்றேன். இன்றிலிருந்து உண்மையான எதிர்க்கட்சியாக நான் இருப்பேன்.

எனக்கெதிராக 24 வழக்குகள் போடப்பட்டுள்ளன. நான் வைத்தியராக இருந்த போது ஒரு தனிப்பட்ட வழக்கும் எனக்கெதிராக இல்லை. ஹெட் லைட் போட்டு வாகனம் ஓட்டியதாக கைது செய்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது பெரிய எதிர்பார்ப்பில் இருந்தேன். யாழ்ப்பாண மக்கள் இந்தக் கட்சியிலிருந்து மூன்று எம்.பிக்களை எதிர்பார்ப்புடன் தெரிவு செய்துள்ளனர். எனக்கு ஏன் பேச இடமளிப்பதில்லை. ஏன் அரசாங்கம் பயப்படுகின்றது. உங்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இன்றிலிருந்து அதனை தீர்த்துக்காட்டுங்கள் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க கூறுகையில்,

அர்ச்சுனா எம்.பி. முன்வைத்த சிறப்புரிமை பிரச்சினை தொடர்பான விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது சபாநாயகர் உள்ளிட்ட உங்களின் பொறுப்பாகும். இந்நிலையில் அர்ச்சுனா எம்.பி. அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். ஆனால் அவருக்கான நேரம் வழங்கப்படாமை மிகவும் ஜனநாயக விரோத செயற்பாடாகும். எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமே நேரம் ஒதுக்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும். அது அரசாங்கத்தின் விடயமல்ல. தயவுசெய்து எதிர்க்கட்சிக்கு ஒதுக்கும் நேரத்தில் அவருக்கும் நேரத்தை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பாராளுமன்றத்துக்கே வெட்கமான விடயமாகும். இவரின் சிறப்புரிமை பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் பாராளுமன்றத்தை நடத்திச் செல்வதிலும் பிரச்சினைகள் ஏற்படும்.

இதேவேளை அவரின் மற்றைய நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பாக அவரை கைது செய்ய பிடியாணை உள்ளது. அது போன்ற விடயங்களுடன் அரசாங்கத்துக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. அது சட்டப்படியான விடயமாகும். அவரை கைது செய்ய வேண்டுமாயின் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட வேண்டும். நீங்கள் தவறு செய்திருந்தால் அது தவறுதான். எவ்வாறாயினும் நாங்கள் தேசிய நல்லிணக்கம் தொடர்பாக உண்மையிலேயே செயற்படும் அரசாங்கமாகும். தயவு செய்து எங்களுக்கு அவ்வாறான விமர்சனங்களை முன்வைக்க வேண்டாம் என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்து கருத்துத் தெரிவித்த அர்ச்சுனா எம்.பி. கூறுகையில்,

இப்போது வரையில் எனக்கு எதிராக 24 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவை எதுவும் தனிப்பட்ட வழக்குகள் கிடையாது. ஊழல்கள் தொடர்பில் எவ்வளவோ தகவல்களை கூறியுள்ளனர். மன்னார் வைத்தியசாலையில் கொலை செய்கின்றனர். நான் எம்.பியாக முன்னர் வைத்தியரே. அப்போது எனக்கெதிராக ஏதாவது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா. நான் இப்போது வடக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன்.

என்னை ஏன் புலி, புலி என்று கூறி கஸ்டப்படுத்துகின்றீர்கள். நான் புலி என்றால் கைது செய்யுங்கள். இல்லாவிட்டால் சுட்டுத்தள்ளுங்கள். நீங்கள் கொலைகளை செய்துள்ளீர்கள். கொலை செய்த அரசாங்கம்தான் நீங்கள். 1980களில் எவ்வளவு கொலைகளை செய்துள்ளீர்கள். இலட்சக்கணக்கில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டுள்ளனர். இன்று எனக்கு எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. வீதியில் தனியாகவே போகின்றேன். என்னைக் கொன்றால் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்றார்.

இவ்வேளையில் எழுந்த எதிர்க்கட்சி பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க கூறுகையில்,

இந்த எதிர்க்கட்சியில் உள்ள சகல கட்சிகளுக்கும் நியாயமான நேரத்தை ஒதுக்குவதற்காக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. குறித்த எம்.பி. தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னர் பிரச்சினையொன்று ஏற்பட்டது. எதிர்க்கட்சி அலுவலக அதிகாரிகள் மற்றும் எமது எதிர்க்கட்சி எம்.பிக்களுடன் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் நாங்கள் சபாநாயகருக்கு முறையிட்டுள்ளோம். இது தொடர்பில் பதிலை வழங்குமாறு கோரியுள்ளோம். இந்நிலையில் குறித்த எம்.பி இன்று முதல் அரசாங்கத்துக்கு எவ்வித ஆதரவும் வழங்குவதில்லை என்று கூறியுள்ளார். இதன்படி எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பியாக இப்போது அவர் தெரிகின்றார். எதிர்க்கட்சிகளின் மற்றைய கட்சிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வந்ததை போன்று காலம் மற்றும் உரையாற்றும் இடம் தொடர்பான விடயங்களை தீர்மானிப்பது எங்களின் பணியாகும். இதற்கு இணங்குவதாக இருந்தால் அந்த நேரத்தை வழங்க இப்போது முதல் நடவடிக்கை எடுக்கலாம். அத்துடன் குழுக்களுக்கு மற்றைய கட்சிகளின் உறுப்பினர்கள் முன்வைக்ககப்படும் கோரிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கின்றோம் என்றார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் தை மாதம் 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** தேவையற்ற மன அழுத்தத்தால் உடல் நலத்தை கெடுத்துக் கொள்வீர்கள். எதற்கும் அவசரம் வேண்டாம்.

**ரிஷபம்** நீங்கள் எதிர்பார்த்த பணம் உங்கள் கையில் கிடைக்கப்போகிறது. காதலியால் அல்லது மனைவியால் இலாபங்கள் உண்டு.

**மிதுனம்** கல்வியால் சாதனைகள் படைக்கப் போகின்றீர்கள். தாயின் ஆசி உண்டு. நீண்ட நாள் வழக்குகள் நிறைவடையப் போகின்றது.

**கடகம்** புத்திரர்களின் தேவையற்ற செயற்பாடுகளால் கவலை கொள்வீர்கள். தொழில் துறையில் வீண் குறைக் கேட்க வேண்டி வரும்.

**சிம்மம்** தாயால் கவலைகள் ஏற்படலாம். நீங்கள் பயன்படுத்தும் பொருட்கள் உங்கள் கையால் பழுதடையும்.

**கன்னி** மனத்துணிவுடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். நண்பர்களால் மன நிறைவு கொள்வீர்கள். அதிர்ஷ்டமிக்க நாள்.

**துலாம்** தேவையற்ற பேச்சுகள் வீண் வம்புகளை வளர்த்துக் கொள்வீர்கள். நம்பிக்கைத் துரோகம் ஏற்படலாம். ஏமாற்றத்துக்கு ஆளாவீர்கள்.

**விருச்சிகம்** குடும்ப உறவில் மகிழ்ச்சி கூத்தாடும். புகழ், செல்வம், செல்வாக்கு அனைத்தும் சிறப்புறும். தன அதிர்ஷ்டம் உண்டு.

**தனுசு** தேவையற்ற பயணங்களால் தொல்லைகளைச் சந்திப்பீர்கள். வேலையிடத்தில் அவமானம் ஏற்படலாம். வீண் வம்பு வேண்டாம்.

**மகரம்** மூத்த சகோதரரால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள். அனைத்துவித இலாபங்களையும் பெறுவீர்கள். தொழில் வகையில் நீங்கள் எதிர்பார்த்த

**கும்பம்** வரப்பிரசாதங்களை பெறுவீர்கள். குடும்ப உறவுக்காக நேரத்தை ஒதுக்குவீர்கள்.

**மீனம்** சகோதர வர்க்கத்தார்களுடன் வீண் பிரச்சினைகள் வரலாம். தந்தையாருடன் விதண்டாவாதம் வேண்டாம்.

**திதி:** தசமி மு.இ.7.25 வரை பின் ஏகாதசி
**நட்சத்திரம்:** அனுஷம் முழுவதும்
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** மரண யோகம் முழுவதும்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** காலை6.28 – 8.28 மணிவரை காலை 10.28 – 10.58 மணிவரை பகல்1.40 – 3.28 மணிவரை
**ராகு காலம்:** 10.58 – 12.28 மணிவரை
**எமகண்டம் :** 3.28 – 4.28 மணிவரை
**குளிகை :** 7.58 – 9.28 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள் இன்று முழுவதும்**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு வாகனங்கள் வழங்கப்படவில்லை; 03 மில். ரூபா எரிபொருள் செலவை ஒரு மில்லியனாக்கினோம்

## சுகத் வசந்த டி சில்வா எம்.பிக்கு மாத்திரமே வாகனம் என்கிறார் பிரதமர்



10ஆவது பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்கள் வழங்கப்படவில்லை என்றும் ஆனால் பார்வையற்ற எம்.பியான சுகத் வசந்த டி சில்வாவுக்கு மாத்திரம் ஜனாதிபதி செயலகம் ஊடாக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. எமது அமைச்சில் 3.24 மில்லியன் ரூபாவாக இருந்த எரிபொருள் செலவை ஒரு மில்லியனாக குறைத்துள்ளோம். பிரதமர் அலுவலகத்தில் குண்டு துளைக்காத வாகனங்கள் இருந்தும் அதனை பயன்படுத்தவில்லை. இதனூடாக 37 மில்லியன் ரூபாவை சேமித்துள்ளோம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு வாகனங்கள் அவசியமாக உள்ளது என்றும் செலவுகளை குறைத்து வாகனங்களை பயன்படுத்துவதில் எந்த பிரச்சினைகளும் தமக்கு கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனைக் கூறினார்.

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்றும் அவை எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன என்றும் சாமர சம்பத் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர்,

10ஆவது பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் பார்வையற்ற எம்.பியான சுகத் வசந்த டி சில்வாவுக்கு மாத்திரம் ஜனாதிபதி செயலகம் ஊடாக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. அவர் பார்வையற்ற பாராளுமற்ற உறுப்பினர் என்ற காரணத்தினால் அவருக்கு உதவும் வகையில் இது வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இதன்போது மேலதிக கேள்விகளை எழுப்பி உரையாற்றிய சாமர சம்பத் எம்.பி., பிரதமர் இவ்வாறு கூறினாலும் மாதிவெலவில் வாகனமொன்று உள்ளது. நீங்கள் பிரதமராக கூறும் கருத்துக்களை ஏற்றுக் கொண்டாலும் ரேஞ்ச் ரோவர் வாகனமொன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் உள்ளது. வீ8 வாகனத்தை விடவும் ரேஞ்ச் ரோவருக்கு செலவு அதிகமாகும். அவரின் பெயரை வேண்டுமென்றால் கூறுகின்றேன். அவர் வசந்த சமரசிங்கவே.

அத்துடன் எனது மேலதிக கேள்வியாக ஒரு விடயத்தை கேட்கின்றேன். பி.எச். 1208 என்ற இலக்கமுடைய வாகனமொன்று சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது உங்களின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இருக்கின்றது. அவரின் பெயரை கூறப்போவதில்லை. பண்டாரவளை பூனாகலை தோட்டத்தில் புல் கட்டுகளை ஏற்றிச் செல்கின்றது. இது தொடர்பான விடயத்தை சபையில் சமர்ப்பிக்கின்றேன். பசறை ஒருங்கிணைப்பு குழுவுக்கு குறித்த வாகனம் வந்துள்ளது. லுணுகலை ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் மற்றும் மாவட்ட கூட்டத்துக்கும் வந்துள்ளது. பதுளை மாவட்டத்திலேயே குறித்த எம்.பியினால் அந்த வாகனம் பயன்படுத்தப்படுகின்றது. இதில் புல்லு கட்டுகளை ஏற்றுகின்றனர். இது அரசாங்கத்துக்கு சரியில்லை. இப்படி இருக்கையில், நீங்கள் வாகனங்கள் வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கின்றீர்கள்.

இதன்போது பதிலளித்த பிரதமர், அதனை எனக்கு அனுப்புங்கள் தேடிப்பார்க்கின்றேன். உங்களுக்கு அல்ல எமது கட்சியில் ஒழுக்கத்தை கொண்டுசெல்ல வேண்டும். அதனால் அதனை தாருங்கள் தேடிப்பார்க்கின்றேன் என்றார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா மேலதிக கேள்வியை எழுப்பி கூறுகையில்,

பிரதமர் இந்த சபையில் கூறும் கருத்தை சரியானதாக ஏற்றுக்கொள்ள முடியாது. பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகிலோ அல்லது மாதிவெல வீட்டுத் தொகுதியிலோ எவரேனும் அதிகாரியை நியமித்தாலோ அல்லது சி.சி.ரி.வி. கெமராக்களை ஆராய்ந்தாலோ இதனை புரிந்துகொள்ள முடியும். எமக்கு தெரியும் வகையில் காலிமுகத்திடலில் காண்பிக்கப்பட்ட வாகனங்களில் அரைவாசி இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களிடமே உள்ளன. உங்களை தவறாக வழிநடத்தியுள்ளனரா தெரியவில்லை. நீங்கள் இவற்றை இல்லாது செய்வதாக கூறியே வந்தீர்கள். ஆனால், உணவகத்தை மூடுவதாக கூறினீர்கள். ஆனால் இவை எதுவும் நடக்கவில்லை. நீங்கள் இந்த விடயங்கள் தொடர்பில் விசாரணை நடத்துங்கள் என்றார்.

இதனைத்தொடர்ந்து மீண்டும் பதிலளித்த பிரதமர்,

எமது எம்.பிக்களுக்கும் எமது அமைச்சர்களுக்கும் வாகனங்கள் தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் கிடையாது. நாங்கள் அமைச்சுகளுக்கு சென்று பார்த்தபோது சூழலுக்கு குறைந்தளவான பாதிப்புகளை கொண்ட வாகனங்களை ஆராய்ந்தோம். ஆனால் அங்கே அதிகளவில் வீ8 போன்ற வாகனங்களே இருந்தன. கஸ்டப்பட்டே நாங்கள் அவற்றை தெரிவுசெய்தோம். எனினும் வாகனங்கள் இல்லாத பிரதி அமைச்சர்கள் உள்ளனர். தமது தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் எம்.பிக்களும் அமைச்சர்களும் உள்ளனர். அவர்களின் தனிப்பட்ட வாகனங்களின் தன்மை தொடர்பில் நாம் எதனையும் கூற முடியாது. எவ்வாறாயினும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு வாகனங்கள் அவசியமாகும். நாங்கள் வாகனங்கள் பயன்படுத்துவதை நிராகரிக்கவில்லை. உத்தியோகபூர்வமாக பயன்படுத்தக் கூடிய மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாகனங்களை எமக்கு பெற்றுக்கொள்ள முடியும். எமது அமைச்சின் எரிபொருள் செலவுகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. 3.24 மில்லியன் ரூபாவாக இருந்த செலவை ஒரு மில்லியனாக குறைத்துள்ளோம். பிரதமர் அலுவலகத்தில் குண்டு துளைக்காத வாகனங்கள் இருந்தும் அதனை பயன்படுத்தவில்லை. இதனூடாக 37 மில்லியன் ரூபாவை சேமித்துள்ளோம். இதனால் எமது வாகன பயன்பாடு தொடர்பில் தேடுவது வேடிக்கையானது என்றார்.




சண்முகராஜா - தனபாக்கியம் தம்பதியரின்
ஐம்பொன்னாக 50 வருடங்கள்
(24.01.2025)

அன்பை அறமாக்கி ஐம்பதாண்டுகள்
இல்லறத்தை நல்லறமாக்கி
இணைபிரியாத் தம்பதிகளாய்
பார் போற்ற இன்னும் பல
நூற்றாண்டு தம்பதிகளாய் வாழ்ந்து
எமக்கு வழிகாட்டுங்கள்
ஆசானாய் - தோழனாய்
சமுதாய வேட்கைகொண்டு
சமூக நலனுக்காக உழைத்த
தங்களை இந்நன்னாளில்
நோய் நொடியின்றி நீடுழி வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

பிள்ளைகள் - பிரபாகரன், ரஜனி, நேசராஜா, கவிதா.
மருமக்கள் - ராஜமணி, விமலராஜா, சுதர்ஷனா, ஷானக
சகோதர சகோதரிகள் மற்றும் பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.


# வன ஜீவராசிகள் - தொல்பொருள் திணைக்களங்கள் தனி அரசாங்கங்கள் போன்றே செயற்படுகின்றன

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு



வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் போன்றவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாததை போன்றே செயற்படுகின்றன என்றும் அரசாங்கத்தின் தூய்மையான இலங்கை திட்டத்தின் கீழ் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் 2413/37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் மீதான ஒழுங்குவிதிகள் உட்பட பல கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தூய்மையான இலக்கை நோக்கிய இலங்கை என்ற திட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம். இந்த திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதே. முன்னாள் ஜனாதிபதி இல்லம் தொடர்பான தீர்மானம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விசாரணைக்கு அழைக்க நடவடிக்கை எடுத்தமை வரவேற்கத்தக்க விடயமே. இது உள்ளூராட்சித் தேர்தலுக்கான யுக்தியாக இருந்துவிடக் கூடாது.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் முப்படையினரும் பொதுமக்களின் காணிகளை அபகரித்துள்ளனர். தேவாலயங்கள், கோயில்களின் காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. இது இல்லாது செய்யப்பட்டு அவை மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கப்படும்போதே இந்த தூய்மையான இலக்கை நோக்கிய இலங்கை என்பது நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறலாம்.

இதேவேளை, திணைக்களங்களின் செயற்பாடுகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாததைபோன்றே இருக்கின்றன. வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகியன தனி அரசாங்கங்கள் போன்றே செயற்படுகின்றன. அது பொதுமக்களின் காணிகளையும் விவசாயிகளின் காணிகளையும் அபகரிக்கின்றன. அந்தக் காணிகளை விடுவிப்பதன் ஊடாகவே தூய்மையான இலங்கை திட்டத்தை வெற்றிப்பெற முடியும்.

இன்று விவசாயிகள் இலட்சாதிபதிகளோ, கோடீஸ்வரர்களோ கிடையாது. அவர்கள் வறுமையான நிலைமையிலேயே இருக்கின்றனர். அவர்களுக்காக நெல் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அத்துடன் அவர்களின் உற்பத்திகளுக்கு நியாயமான விலையை கொடுக்க வேண்டும்.

இதேவேளை, ஊழல்வாதிகள் யாராக இருந்தாலும் திணைக்களங்கள் தொடர்பிலும் அவதானம் இருக்க வேண்டும். சில அதிகாரிகள் தலைக்கணமாக செயற்படுகின்றனர். அவர்கள் அந்த அதிகாரத்தில் இருந்து மாற்றப்பட வேண்டும். இந்த விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

மன்னாரில் நீதிமன்றத்துக்கு முன்னால் துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். இவ்வாறான சம்பவங்களை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். பாதுகாப்புத் தரப்பினரின் மெத்தனப்போக்கே இந்த நிலைமைக்கு காரணம். நானும் இலக்காக்கப்படலாம். பழிவாங்கு படலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இதன்மூலமே தூய்மையான இலக்கை நோக்கிய இலட்சியத்தை அடைய வேண்டும் என்றார்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஜனவரி, 24ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பயங்கரவாத தடைச்சட்டமும் தேசிய மக்கள் சக்தி அரசும்

"பயங்கரவாத தடைச்சட்டம் வெகுவிரைவில் நீக்கப்படுமென்று ஜனாதிபதி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். இந்தச் சட்டத்தை இரத்துச்செய்வது தொடர்பிலும் மாற்றீட்டுச் சட்டம் உருவாக்கம் தொடர்பிலும் ஆராய்வதற்கு அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. உப குழுவின் பரிந்துரைக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இச்சட்டத்தின் பாரதூரத்தை நாங்கள் நன்கு அறிவோம். ஆகவே, சட்டத்தை நிச்சயம் இரத்துச் செய்வோம்"- என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதியமைச்சர் சுனில் வட்டகல பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் உரையாற்றிய உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கமைய அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டுமென்று வலியுறுத்தினார். அதேபோல், அரசாங்கத்தின் விருப்பத்துக்கமைய இந்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியாது. பொலிஸார் இந்தச் சட்டத்தைத் தவறாகவே பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இதற்கு எழுந்து பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் முக்கியமான விடயங்களைக் குறிப்பிட்டார். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படுகின்றது. அது தயாரிக்கப்பட்டதும் குழுவில் ஆராய்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும். அது தொடர்பான விபரங்களை எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளில் உறுதிப்படுத்துவோம். இதற்கமைய பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுமென்பதுடன் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும் - என்றார்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் தனது உரையில் சுட்டிக்காட்டிய பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, பயங்கரவாத தடைச்சட்டம் பற்றிப் பேசப்படுகிறது. ஏனைய கட்சிகளைக் காட்டிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தால் நாங்கள் தான் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டோம். ஆகவே, இதன் பாரதூரம் எமக்கு நன்கு தெரியும்.பயங்கரவாத தடைச்சட்டம் வெகுவிரைவில் நீக்கப்படுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்தச் சட்டத்தை இரத்துச்செய்வது தொடர்பிலும் மாற்றீட்டுச் சட்டம் உருவாக்கம் தொடர்பிலும் ஆராய்வதற்கு அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.உப குழுவின் பரிந்துரைக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, பயங்கரவாத தடைச்சட்டத்தின் பாரதூரத்தை நாங்கள் நன்கு அறிவோம். தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கமைய இச்சட்டத்தை நீக்குவோம் - என்றார்.

மிக மோசமான - காட்டுமிராண்டித்தனமான - மனிதாபிமான முறைமைகளுக்கே முரணான - இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த 47 ஆண்டுகளாக இலங்கையில் தொடர்ந்து நீடிக்கின்றது.

இது மனிதாபிமான முறைமைகளுக்கு மாறான கொடூரச் சட்டம் என்பதை இலங்கையின் முன்னைய அரசுகளும் கூட ஒப்புக்கொண்டிருக்கின்றன. உள்நாட்டில் மட்டுமல்லாமல், சர்வதேச அரங்குகளில் நடந்த பல்வேறு உயர்நிலை மாநாடுகளில் கூட இந்த விடயத்தை இலங்கை அரசுகள் ஒப்புக்கொண்டு, அதனை நீக்குவதாக வாக்குறுதியளித்திருக்கின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென்று அந்த அரசுகள் ஒப்புக்கொண்டாலும் அது இன்னும் நீக்கப்படவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறிய இலங்கை ஆட்சியாளர்கள் அதனை ஒருபோதும் செய்யவில்லை.

இப்போது அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி கூட, தான் ஆட்சி அதிகாரத்துக்கு வரும்வரை இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று துடியாய் துடித்தது. இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதும் அதற்கான அவசரம் இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காக அதற்கு மாற்றீடாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படும் என்று கூறப்பட்டாலும் அது நடைபெறுவதாக இல்லை. இருக்கும் சட்டத்தை எப்போது நீக்குவோம், புதிய சட்டம் எப்போது வரும் என்று திட்டவட்டமாக வரையறை செய்து பதில் கூறாமல், மாறி மாறி அதிகாரத்துக்கு வருகின்ற அரசுகள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக்கொண்டிருக்கின்றன.

இலங்கையில், பயங்கரவாதம் தொடர்பான ஆரம்ப சட்ட ஏற்பாடுகள் 1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதுடன், இது பயங்கரவாத தடுப்புச் சட்டம் அல்லாது, மாறாக, தேசிய அனர்த்தம் அல்லது பாரிய விபத்து போன்ற சூழ்நிலைகளைக் கையாள்வதற்காக நிறைவேற்றுனர்களுக்கு தற்காலிகமாக மேலதிக அதிகாரங்களை வழங்கும் சட்டக்கட்டமைப்பாகும்.

இது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இல்லையென்றாலும், பயங்கரவாதச் செயல்கள் என அரசாங்கத்தால் அடையாளப்படுத்தப்படும் செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் அந்தச் செயல்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கும் அவசரகாலச் சட்டம் உறுதுணையாக இருந்தது. அந்த அமைப்புகளைத் தடை செய்வதற்கு அவசரகால நிலைச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன.

1971 இல் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசர நிலையைப் பிரகடனம் செய்வதன் மூலம் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

1978 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் கிளர்ச்சி நடவடிக்கைகள் அதிகரித்த போது, பாராளுமன்றம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தடைச் சட்டத்தை நிறைவேற்றி, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அதையொத்த பிற அமைப்புகளைத் தடை செய்தது. இலங்கையின் வரலாற்றில் நிறைவேற்றப்பட்ட முதலாவது பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்று இதனைக் கூறலாம்.

பின்னர் ஜூலை 1979 இல் 1978ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) நிறைவேற்றப்பட்டதுடன், இது முன்னர் குறிப்பிடப்பட்ட சட்டத்தை இரத்துச் செய்தது. இந்த தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் மூன்று வருட காலத்துக்கு இயற்றப்பட்டாலும் 1982இல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டது.

* சட்டத்தின் கீழான குற்றங்களை மிகவும் பரந்தளவில் விபரிக்க முடியும்.பொதுச் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலைகளில் கூட பாதுகாப்புப் படைகள் குடிமக்களை ஒடுக்குவதற்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம்.
* ஊடகத்துறையைக் கட்டுப்படுத்தும் நடைமுறையிலுள்ள ஏற்பாடுகள் பேச்சுச் சுதந்திரத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது.
* ஓர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது உயர் பொலிஸ் அதிகாரியிடம் அளிக்கப்படும் வாக்குமூலம், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான ஆதாரமாகப் பயன்படுத்தப்படலாம்.
* கைது செய்யப்பட்ட நபரை 18 மாதங்கள் வரை காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்க பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் உள்ளதுடன் அதனை நீதிமன்றத்தில் விசாரிக்க முடியாது.

வழக்குகள் முடிவடையும் வரை பிணை வழங்க அதிகாரம் இல்லாமை. இதன் காரணமாக வழக்கு தொடரப்படாத பலர் இன்னமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 2022ஆம் ஆண்டு இயற்றப்பட்ட திருத்தத்தின் மூலம் ஓராண்டுக்குப் பிறகு பிணை வழங்கும் வகையில் சட்ட ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டன. என்றாலும், சட்டத்தின் தாக்கத்துக்கு குறைவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டாலும் அதற்குப் பதிலாக எவ்வகையான சட்டம் கொண்டுவரப்படப்போகிறது என்பதை ஆராயவேண்டியுள்ளது. அது வாள் போய் கத்தி வந்த கதையாகிவிடக் கூடாது.



# ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைந்த அணுகுமுறை

கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில், அறியாமைதான் தீவினையின் மூலவேர் என்ற பிளேட்டோவின் கூற்றுக்கிணங்க பாசி படிந்த வைரத்தைப்போல அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் இச்சமூகத்தை அறிவுடைய சமூகமாக மாற்றுவதில் கல்வியின் பங்கு அளப்பரியது. இதனால்தான் இந்த நூற்றாண்டுச் சமூகம் அறிவுசார் சமூகம் என அழைக்கப்படுகின்றது.

ஒரு பிள்ளையின் வாழ்நாள் முழுவதுமான கல்விக்கு அத்திவாரமாகவும் அடிப்படையாகவும் அமைவது ஆரம்பக்கல்வியாகும். தாயின் கருவறையில் குழந்தை இருக்கும் காலத்தை விட ஆசிரியருடன் வகுப்பறையில் இருக்கும் காலம் அதிகமாகும். சமுதாயத்தின் சிற்பிகளாகிய பிள்ளைகளினுடைய அறிவின் திறவுகோலாக ஆரம்பக்கல்வி விளங்குகின்றது. பிள்ளைகள் சிறந்த அறிவைப் பெற ஆரம்பக்கல்வியில் பயன்படுத்தப்படும் அணுகுமுறையாக ஒன்றிணைந்த அணுகுமுறை காணப்படுகின்றது.

பாடங்களைத் தனித்தனியாகக் கற்பிக்கையில் எழும் சிரமங்களையும் குறைபாடுகளையும் தீர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் அணுகுமுறை ஒன்றிணைந்த அணுகுமுறையாகும். பிள்ளைகளிடத்தில் பல்திற ஆற்றல்களையும் பயனுள்ள கற்றல் சூழலையும் ஏற்படுத்த இவ்வணுகுமுறை துணைபுரிகின்றது. இந்தியாவில் ஒன்றிணைந்த அணுகுமுறையானது ஆரம்பக்கல்வியில் பிரச்சினை தீர்த்தல் வழிமுறையாகக் கையாளப்படுகிறது.

இலங்கையில் 1972 ஆம் ஆண்டின் ஆரம்பக்கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் ஒன்றிணைந்த பாடவிதானம் அறிமுகம் செய்யப்பட்டது. இது மூன்று பாடங்களுக்கிடையே ஒழுங்கமைக்கப்பட்டது. அவை,

-உடற்கல்வி மற்றும் அழகியல் செயற்பாடுகள்
-ஆக்கத்திறன் செயற்பாடுகள்
-சுற்றாடல் செயற்பாடுகள்
என்பனவாகும்.

பின்னர் 1985 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தில் சுற்றாடல் செயற்பாடுகள் எனும் பாடத்தின் கீழ் ஒன்றிணைந்த பாடவிதானமாகத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு சீர்திருத்தங்களில் முதன்மை நிலை 01இல் செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலத்தினூடாக ஒன்றிணைப்பு ஏற்படுத்தப்பட்டது. தற்போதைய பாடவிதான ஒன்றிணைப்பானது சிந்தித்தல் திறன்கள், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் போன்ற தேர்ச்சிகளில் கவனஞ் செலுத்துகின்றது எனலாம்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஒன்றிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி கற்பிக்கும்போது மாணவர்கள் ஆசிரியரின் நேரடி அவதானிப்பின் கீழ் பங்கெடுத்துக் கொள்கின்றனர். மாணவர்கள் குறித்த கருப்பொருள் சார்ந்த முழுமையான விளக்கத்தைப் பெறமுடியும். ஒன்றிணைந்த அணுகுமுறையானது கலந்துரையாடல், பரிசோதனை போலச்செய்தல், செயற்றிட்ட வேலை, களப்பயணங்கள் போன்ற பல்வேறு அம்சங்களுடன் தொடர்புடையது. அந்தவகையில், ஒன்றிணைந்த பாடவிதானத்தின் பிரதான அம்சங்களை நோக்குகையில்,

-பாடவிதானத்துள் சில பாடங்கள் ஒன்றிணைக்கப்படல் அல்லது கூட்டிணைக்கப்படல் இதன் முக்கியமான இயல்பாகும். எனவே, ஏற்றுக்கொள்ளப்பட்ட பாட அலகுகளில் பிளவு காணப்படுவதில்லை.

-பாடவிதானத்தைச் சேர்ந்த கல்வி வேலைத்திட்டங்கள் வெவ்வேறு தொனிப்பொருள்கள், தலைப்புகள், அனுபவங்கள், தொழிற்பாடுகள், செயற்றிட்டங்கள் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்டவையாகும். அவற்றின் அடிப்படையிலேயே வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

-உரிய ஆசிரியரின் ஒத்துழைப்புடன் ஒன்றிணைக்கப்பட்ட பாடவிதானத்தில் ஒன்றிணைக்கப்பட்ட தொழிற்பாடுகளைக் கட்டியெழுப்புவது அவசியமாகும். அத்தோடு, அத் தொழிற்பாடுகளை முறையாகத் திட்டமிடலும் முக்கியமானதாகும்.

-உரிய ஆசிரியர் குழுவினரின் திறன்களை ஒன்றிணைப்பதன் மூலம் கல்வி வேலைத் திட்டங்களைத் திட்டமிடல், தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ளல்.

-மாணவரின் விருப்புகள், திறமைகள் ஆகியவற்றினூடாக வெளிக்கொணரப்படும் தொழிற்பாடுகளில் கூடிய கவனஞ் செலுத்த வேண்டுமென்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

-வெவ்வேறு தொழிற்பாடுகளின் ஊடாக ஆராய்வுக்கும் அவதானிப்புக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றமையால் அது மாணவரின் சுயாதீனமான தொழிற்பாடுகளுக்குத் துணையாக அமைகின்றது. மாணவர்கள் கூட்டாகவோ குழுக்களாகவோ தொழிற்பாடுகளில் ஈடுபட வேண்டுமென எதிர்பார்க்கப்படு கின்றது.

டூயி எனும் உளவியலாளர் கற்றல் அனுபவம் பற்றிக் குறிப்பிடும் போது நாம் கற்கிறோம் என்று கூறுவதைக் காட்டிலும் நாம் அனுபவம் பெறுகின்றோம் என்று கூறுவதே சிறந்த கல்வி முறையாகும் என்று கூறுகின்றார். இத்தகைய கல்வி முறையை ஏற்படுத்துவதற்கு ஒன்றிணைந்த அணுகுமுறை மிகவும் பயனுடையதாக இருக்கும். கடந்த சில தசாப்தங்களாக பாரம்பரிய முறையில் ஆரம்ப பிள்ளைகளுக்கு அறிவை வழங்குதல் மிகவும் பூரணமற்றது என உணரப்பட்டுள்ளது. (Singh, 2014) நாட்டினது சொத்தாகிய மாணவர்களை மேம்படுத்தும் வகையில் ஒன்றிணைந்த அணுகுமுறையை ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை உயிரோட்டமாக மாற்ற,

-பிள்ளைகளுக்கு அளிக்கப்பட வேண்டிய அனுபவங்கள் அவர்களது சூழலுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல்.
-விருத்தியுற வேண்டிய ஆற்றல்கள், திறன்கள், பண்புகள்
-பாடத்தின் இலக்குகள் / தேர்ச்சிகளை அடையக்கூடியவாறு இருத்தல்.
-அன்றாட வாழ்வுடன் பொருந்தச் செய்தல்

போன்றவற்றில் ஆசிரியர் கவனஞ்செலுத்த வேண்டும். ஆசிரியர் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் காலப்போக்கில் சூழ்நிலைக்கேற்ப விரிவடைந்து செல்கின்றன. அந்த வகையில், 1974இல் 'Teaching in a changing society' என்ற நூலை எழுதிய இரு ஆங்கில கல்விமான்களாகிய டி.விஞ், டி.பீரின் என்பவர்கள் ஒன்றிணைந்த அணுகுமுறையை வகுப்பறையில் பயன்படுத்துவதில் ஆசிரியர்களின் வகிபங்கை பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றனர்.

-நவீன கற்பித்தல் உபகரணங்களை பயன்படுத்துபவர்.
-வளங்களை ஒன்றிணைப்பவர்.
-சம்பிரதாய பாட எல்லைகளைக் கடந்து ஒருங்கிணைத்து கற்பிப்பவர்.
-தேடியறிபவராக இருப்பவர்.
-கற்றல் கற்பித்தல் அம்சங்களை சிறந்த முறையில் ஒழுங்கு செய்பவர்.

என பல்வேறு வகிபங்குகளை ஆசிரியர் ஆற்றுபவராகக் காணப்படுகின்றார். சராசரி ஆசிரியர் கூறுகின்றார், நல்லாசிரியர் விளக்குகிறார், மிக நல்ல ஆசிரியர் செய்துகாட்டுகின்றார்,சிறப்பு மிக்க ஆசிரியர் தூண்டுகின்றார் என வில்லியம் ஆதர் வோட் குறிப்பிடுகின்றார். இதற்கமைய ஒன்றிணைக்கப்பட்ட வகுப்பறையில் ஆசிரியரின் பங்கு அளப்பரியது.

ஒன்றிணைந்த பாடவிதானத்தின் அறிமுகம் கல்வி அமைப்பின் ஒரு முக்கிய காரணியாகத் திகழ்கிறது. இது மாணவர்கள் அடையப்பட வேண்டிய அடிப்படைத் திறன்களை குறித்தவொரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு திறன்களை ஊட்டுவதாகக் காணப்படுகின்றது. ஒரு மாணவன் உணர்வு பூர்வமாக ஒரு கருப்பொருளூடாக பல்வேறு விருத்திசார் அம்சங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கற்பித்தல் அணுகுமுறையாக ஒன்றிணைந்த அணுகுமுறை ஆரம்பக்கல்வியில் கையாளப்படுகின்றது. ஓர் ஆரம்பக் கல்வி ஆசிரியர் என்ற வகையில் ஒன்றிணைந்த செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவதில் பின்வரும் விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

-வகுப்பறைச் சூழ்நிலை
-கைவசமுள்ள வளங்களின் அளவு
-கற்பிக்கும் பாடவேளையின் நேரம்
-கலைத்திட்டத்தின் தன்மை
-மாணவரின் உளவயது

என்பனவாகும். வில்லியம் மால்லே (1996) கற்றல் அனுபவங்களை அர்த்தமுள்ளதாக மாற்றும் விதத்தில் பாடங்களையும் முறைகளையும் ஒன்றிணைக்கும் போதும் இடைத்தொடர்புபடுத்தும் போதும் பாடவிதானமானது சீர்திருத்தத்துக்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும் எனக் கூறுகின்றார். இதனடிப்படையில் ஆசிரியர் ஒன்றிணைந்த கலைத்திட்டத்தைப் பயன்படுத்தும்போது பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். அவையாவன.

-பாட உள்ளடக்கத்தை ஒன்றிணைத்தல்.
-வகுப்பறை அடர்த்தி.
-கற்றல் - கற்பித்தல் செயன்முறை.
-சூழலைத் தயாரித்தல்.
-கூட்டிணைவு.
-புதிய ஊடக கருவியை கையாள முடியாமை.
-உளவயதுக்கு பொருத்தப்பாடற்ற பாடத்திட்டம்.
-ஒன்றிணைந்த அணுகுமுறையில் ஆசிரியர்களுக்கான சரியான புலமையின்மை

என்பவற்றைக் கூறலாம்.

ஒளிரும் தீப்பந்தத்தை வைத்திருப்பவர்கள் மற்றவர்களுக்கு கொடுப்பது போல் ஆசிரியர்கள் திகழ்கின்றார்கள் என்று கூறுகின்றார். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆசிரியர்கள் ஒன்றிணைந்த கலைத்திட்டத்தை வகுப்பறையில் பிரயோகிக்கும் போது ஏற்படும் சவால்களை சமாளிப்பதற்கு தீர்வுகளைப் பரிந்துரைக்க முடியும்.

-ஆசிரியருக்கு வாண்மை விருத்தியை வழங்குதல்.
-புதிய கற்பித்தல் முறைகளைக் கையாளுதல்.
-ஒன்றிணைப்பு பாடத்திட்டத்தை செயற்படுத்த சூழலைத் தயாரித்தல்.
-சகபாடிக் கற்றலை ஊக்குவித்தல்.
-வெவ்வேறு கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்துதல்.
-பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளல்

என கல்வியில் கற்றலும் கற்பித்தலும் இரு கண்களாக உள்ளன. பாரம்பரிய விழுமியங்களுக்கும் புதிய வளர்ச்சிக்கும் சமநிலையை ஏற்படுத்துபவர்கள் ஆசிரியர்களேயாவர். ஆசிரியர்களுக்கு ஏற்படும் சவால்களுக்கு மேலே குறிப்பிட்ட தீர்வுகளைப் பயன்படுத்தும் போது சிறந்த வெற்றிகரமான கற்றற் சூழலை உருவாக்க முடியும். மேலும் ஆசிரியர் எண்ணக்கரு வரை படத்தையும் பயன்படுத்த முடியும். கற்போனைச் செயற்பாட்டு நிலைக்கு இட்டுச்சென்று நீண்டு நிலைத்து நிற்கக்கூடிய கருத்துள்ள கற்றற் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு ஒன்றிணைந்த அணுகுமுறையில் எண்ணக்கரு வரைபட நுட்பமுறை ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்படுகின்றது. குறித்த ஒரு பாடத்தினது அறிகை அமைப்பை பல பரிமாண வடிவில் பிரதிபலிப்பதற்கு எண்ணக்கரு வரைபடம் சிறந்ததாகும். எண்ணக்கரு வரைபடமானது இணைப்புச் சொற்களால் எண்ணக்கருக்களுக்கிடையேயான கருத்துள்ள தொடர்புகளைக் கொண்டு அமைந்திருக்கும். ஆசிரியர் தனது கற்பித்தல் செயற்பாட்டின் போது எண்ணக்கரு வரைபட நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறை மிகவும் வினைத்திறன் உள்ளதாக அமைக்க முடியும். அதனடிப்படையில் ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதனால் மாணவர்களுக்கு ஏற்படும் அனுகூலங்கள் சில பின்வருமாறு:

-மாணவர்களது விமர்சன சிந்தனை, சிக்கல் தீர்த்தல், அழகியல்திறன், ஆக்கச் சிந்தனை என்பன விருத்தியடையும்.
-பிள்ளையின் பூரண விருத்திக்கு இட்டுச் செல்கின்றது.
-மாணவர்களது கல்வி ஈடுபாடு அதிகரிக்கும்.
-அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்களின் அடைவை ஒன்றிணைக்கின்றது.
-ஒன்றிணைந்த ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கின்றது.
-கற்றல் செயல்முறையில் பெறுபேறுகளை மாணவர்கள் அடைவதற்கு வழியமைத்தல்.
-சிறந்த கற்றல் அனுபவங்கள்

ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். முன்பள்ளி – ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைந்த அணுகுமுறையின் எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகள்:

-முன்பள்ளிகளில் ஒன்றிணைந்த அணுகுமுறையின் எண்ணக்கருவானது மிகவும் நெகிழ்வானதாகும். ஆனால், ஆரம்பக் கல்வியில் முறைப்படுத்தப்பட்டு காணப்படுகின்றது.
-முன்பள்ளியில் முறைசாராத் தன்மையையும் ஆரம்பக் கல்வியில் முறைசார் தன்மையையும் கொண்டுள்ளது.
-முன்பள்ளிகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை தேவைக்கேற்ப மாற்றியமைக்கலாம். ஆனால், ஆரம்பக் கல்வியில் இலக்குகளை நோக்கி நகர வேண்டியுள்ளது.
-முன்பள்ளிகளில் ஒழுங்கமைப்பு மீறப்படுகின்றது. ஆரம்பக் கல்வியில் ஒழுங்கமைப்பைக் காணமுடியும்.

ஆரம்பக் கல்வியானது ஓர் சிறந்த முதலீடாகும். இது ஒரு சமுதாயத்தின் முக்கிய தத்துவ உளவியற் கல்வி அம்சம் என்றே கூற வேண்டும். உலகிலுள்ள சவால்கள் மற்றும் பிரச்சினைகளின் தீர்வுகள் பற்றி பரந்துபட்டு சிந்திப்பதற்கான ஒரு அணுகல் புள்ளியாக ஒன்றிணைந்த அணுகுமுறை காணப்படுகின்றது. ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு மிகவும் உகந்த அணுகுமுறையாகவும் உள்ளது. இது மாணவர்களுக்கு அர்த்தமுள்ள பயிற்சியை வழங்குவதோடு பாடக்கலைத்திட்டத்தில் காணப்படும் துண்டாடல்கள் நீக்கப்படுகின்றன.

மாணவர் மையக் கல்விக்கு வழிகோலுவதனால் ஆசிரியர் வழிகாட்டியாக மாறுகிறார். தெரிந்தவர்கள் செய்கிறார்கள். புரிந்து கொள்பவர்கள் கற்பிக்கிறார்கள் என்ற அரிஸ்டோடிலின் கூற்று நினைவு கூரத்தக்கது. ஒன்றிணைந்த வகுப்பறையின் முக்கிய வளமாக ஆசிரியர்களே திகழ்கின்றனர்.

இத்தகைய வகுப்பறையில் மாணவர் ஆசிரியர் தொடர்பை நன்கு பேணக்கூடிய வாய்ப்பும் கிடைக்கின்றது. ஒன்றிணைந்த அணுகுமுறையை முன்னெடுப்பதற்கும் பொருத்தமான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியதும் முக்கிய பணியாகும்.

***சரவணன் அபிஷாலினி,***
***இரண்டாம் வருட மாணவி,***
***கல்விமாணி(சிறப்பு) ஆரம்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்,***
***இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.***

## இன்றைய நாளில்...

* 1897 – சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். யாழ். இந்துக் கல்லூரியில் அவருக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.
* 1908 – பேடன் பவல் இங்கிலாந்தில் முதலாவது சிறுவர் சாரணப் பிரிவை ஆரம்பித்தார்.
* 1939 – சிலியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 28 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
* 1978 – கொஸ்மஸ் - 954 என்ற சோவியத் செயற்கைக்கோள் பூமியின் வளிமண்டலத்தினுள் எரிந்து, அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.
* 1984 – முதலாவது எப்பிள் மக்கின்டொஷ் தனி மேசைக் கணினி அமெரிக்காவில் விற்பனைக்கு வந்தது.
* 1986 – வொயேஜர் - 2 விண்கலம் யுரேனஸின் 81 ஆயிரத்து 500 கி.மீ. தூரத்துக்குள் வந்தது.
* 1990 – ஜப்பான் 'ஐட்டென்' என்ற தனது முதலாவது நிலவுச் சலாகையை ஏவியது.
* 2006 – இலங்கை ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருமலையில் ஆளுநர் செயலகத்துக்கருகாமையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
* 2009 – இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமல் போனார். இவர் கொல்லப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

## நக்கல் நமசிவாயம்

ரோஹிங்யா அகதிகளை திருப்பி அனுப்ப மினக்கெடத் தேவையில்லை பாருங்கோ .. இன்னும் கொஞ்ச நாளில ஏண்டா இங்கே வந்தோமென்று வெறுப்பாகி அவங்களே போக முயற்சிப்பாங்க...



# பெருந்தோட்ட மக்களுக்கு இவ்வருடத்துக்குள் 4,350 புதிய வீடுகள்

## பிரதியமைச்சர் பிரதீப் உறுதி



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தோட்ட மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 2025ஆம் ஆண்டுக்குள் 4,350 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதோடு பெருந்தோட்ட மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து அவர்களை வறுமை நிலையிலிருந்து மீட்டெடுப்பது அரசாங்கத்தின் பிரதான நோக்கமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தோட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் தங்களது அரசியல் நட்பு வட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது எனவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இப் புதிய வீடுகள் தோட்டப்புறங்களில் வாழும் உரிய பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை (21) அரசாங்கத்தினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பெருந்தோட்ட நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும், குடிசன புள்ளிவிபர மதிப்பீடுகளுக்கமைய, 83.75வீதமானோர் இலங்கையில் சொந்த குடியிருப்புகளில் வாழ்ந்து வருவதோடு, அதில் 5.6வீதமானோர் தோட்டப்புறங்களை சார்ந்தவர்களாவர்.

இது மிகவும் குறைந்த எண்ணிக்கையாகும். இலங்கையின் வாழும் சமூக கட்டமைப்பின்படி வறுமையானோர் 11.9வீதமாவர். அதிலும் பெருந்தோட்டப் பகுதிகளில் 29.7வீதமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இதனடிப்படையில், தோட்டப்புறங்களில் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுத்து, அவர்களுக்கான வீட்டுப் பிரச்சினைக்கான விரைவான ஒரு தீர்வினை பெற்றுக்கொடுப்பது எமது தலையாயக் கடமையாகும். 10,000 இந்திய உதவி வீட்டுத் திட்டத்தின் கீழ் 1,300 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் 2025ஆம் ஆண்டு முடிவதற்குள் 4,350 வீடுகளும் 2026 வருடத்தினுள் மேலும் 4,350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு, தோட்ட மக்களுக்கு அவ்வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலின்போது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி மற்றும் அரசாங்கத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் மேல்மட்ட அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு; இம்மாதத்தில் இதுவரை 3,350 பேர் அடையாளம்

## இருவர் உயிரிழப்பு

**Current Status of Dengue in Sri Lanka** — As of 22.01.2025 midnight

| 2025 | 3649 |
|---|---|
| January | 3649 |

| 2024 | 49873 |
|---|---|
| December | 3602 |
| November | 3498 |
| October | 2964 |

| District/ Unit | No of Cases | |
|---|---|---|
| Colombo | 491 | 13.5% |
| CMC | 463 | 12.7% |
| Gampaha | 558 | 15.3% |
| Kalutara | 95 | 2.6% |
| NIHS | 42 | 1.2% |
| Kandy | 218 | 6.0% |
| Matale | 95 | 2.5% |
| Nuwaraeliya | 9 | 0.3% |
| Galle | 224 | 6.3% |
| Matara | 122 | 3.4% |
| Hambantota | 90 | 2.3% |
| Jaffna | 149 | 3.9% |
| Mullaitivu | 1 | 0.0% |
| Kilinochchi | 9 | 0.3% |

| District/ Unit | No of Cases | |
|---|---|---|
| Mannar | 36 | 1.0% |
| Vavuniya | 3 | 0.1% |
| Batticaloa | 209 | 5.6% |
| Trincomalee | 89 | 2.6% |
| Ampara | 10 | 0.3% |
| Kalmunai | 52 | 1.4% |
| Anuradhapura | 69 | 1.9% |
| Polonnaruwa | 19 | 0.5% |
| Kurunegala | 76 | 2.1% |
| Puttalam | 71 | 2.0% |
| Badulla | 70 | 1.9% |
| Monaragala | 74 | 2.1% |
| Ratnapura | 193 | 5.5% |
| Kegalle | 112 | 3.1% |

| Province | No of Cases | |
|---|---|---|
| Western | 1649 | 45.0% |
| Southern | 436 | 11.9% |
| Eastern | 360 | 9.9% |
| Central | 322 | 8.7% |
| Sabaragamuwa | 305 | 8.5% |
| Northern | 198 | 5.3% |
| North Western | 147 | 4.1% |
| Uva | 144 | 4.0% |
| North Central | 88 | 2.4% |

| | |
|---|---|
| High-risk MOH Areas [week 2, 2025] | 22 |
| Average Mid-night Total [Week 2, 2025] | 379 |
| Dengue Deaths in 2025 | 02 |
| Case Fatality Rate | 0.06% |

Source: NaDSys surveillance

ஜனவரி மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3,649 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இருவர் உயிரிழந்துள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் மாத்திரம் மொத்தமாக 1,649 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அது 45 வீத அதிகரிப்பாக பதிவாகியுள்ளது.

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகமான நோயாளர்கள் (558) அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 15.3 வீத அதிகரிப்பும் பதிவாகியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 491 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 13.5 வீத அதிகரிப்பும் பதிவாகியுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் 95 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த வருடத்தின் இறுதியில் மொத்தமாக 49,877 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் 24 டெங்கு மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

2024ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 2,965 நோயாளர்களும் நவம்பர் மாதத்தில் 3,498 நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் 3,604 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# 180 பெருக்கல் - வகுத்தல் கணக்குகளுக்கு 03 நிமிடங்களில் விடை எழுதி சாதனை

## சோழன் புத்தகத்தில் இடம்பிடித்த 08 வயது மாணவன்



(எஸ்.சதீஸ்)

அபகஸ் முறை மூலம் 180 பெருக்கல் மற்றும் வகுத்தல் கணக்குகளுக்கு 03 நிமிடங்களில் விடையெழுதி 08 வயது மாணவன் சோழன் உலக சாதனை படைத்துள்ளார்.

மாத்தளை மாவட்டம் கலாதுவெல பகுதியில் வசித்து வரும் தினேஸ்ராஜ் - ஷெரின் ஆகியோரின் 08 வயது மகனான நிஷ்விக் மாத்தளையில் இயங்கி வரும் எஸ்.ஐ.பி. அபாகஸ் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தில் கற்று வருகிறார்.

தொடர் பயிற்சியின் காரணமாக கணக்கிடுவதில் இவருக்கிருந்த வேகத்தை கவனித்த இவரது ஆசிரியர்களான சக்கரப்பிரியா மற்றும் சுரேந்திரன் இவரது திறமையை உலக சாதனையாகப் பதிவுசெய்ய முடிவெடுத்தனர். இதற்கான நிகழ்வு கொழும்பு ஜாயா மாவத்தையில் அமைந்துள்ள சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது மாணவன் நிஷ்விக் மூன்று மற்றும் இரண்டு எண்களை ஒரு எண்ணினால் பெருக்கியும் மூன்று எண்களை ஒரு எண்ணால் வகுத்தும் 03 நிமிடங்களில் 180 கணக்குகளுக்கு சரியான விடையளித்தார். இவரது முயற்சியை முறைப்படி கண்காணித்த சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணிராஜா மற்றும் பீப்பிள் ஹெல்பிங் பீப்பள் பவுண்டேஷனின் இயக்குநர் க்ளோரன்ஸ் சாமுவேல் போன்றோர் உலக சாதனையாக உறுதி செய்து சாதனை மாணவனுக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், நினைவுக் கேடயம், பதக்கம், அடையாள அட்டை மற்றும் பைல் போன்றவற்றை வழங்கி பாராட்டினார்கள்.

சோழன் உலக சாதனை படைத்த இளம் கணித மேதைக்கு எஸ்.ஐ.பி. அபகஸ் பயிற்சி மையத்தின் நிர்வாகத் தலைவர்கள் பரிசளித்துப் பாராட்டினார்கள். SIP அபகஸ் நிறுவனத்தின் சார்பில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தவர்களும் சோழன் உலக சாதனை படைத்த மாணவனை வாழ்த்திப் பாராட்டினார்கள்.

# ஒடிசி ரயில் இ-ரிக்கட் மோசடி விவகாரம்; ரயில் நிலைய ஊழியர்களுக்கும் தொடர்பு

## கைதானவரின் வாக்குமூலத்தில் அம்பலம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கொழும்பு கோட்டையிலிருந்து எல்ல நோக்கி பயணித்த ஒடிஸி ரயிலின் இ-ரிக்கெட்டுகளை மோசடி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கண்டி முச்சக்கரவண்டி சாரதி குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் நேற்று (23) ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், சந்தேகநபர் வழங்கிய தகவலின்படி, ரயில் திணைக்களத்தின் பல ஊழியர்களும் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த சந்தேகநபரிடமிருந்த கடந்த ஆறு மாதங்களில் அதிக கட்டணத்தில் ரயில்வே இ-ரிக்கெட்டுகளை வாங்கியவர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய புத்தகம் மற்றும் கைத்தொலைபேசி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சந்தேகநபர் 400 ஆசனங்களுக்குரிய 125 சீட்டுகளை விற்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், முச்சக்கரவண்டி சாரதியை அதன் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் (22) பிற்பகல் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.





தெற்காசிய தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மத்திய மாகாண அரச சேவையின் ஒரே விளையாட்டு வீராங்கனையான திருமதி ஒனிகா பெர்னாண்டோவை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றது. கண்டி பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில் ஆணையாளர் திருமதி சமிலா அத்தபத்து தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலரும் கலந்துகொண்டனர். (எம்.ஏ.அமீனுல்லா)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 87,500 ரூபா தண்டப்பணம்

(ஹனபி எம். தாஸீம்)

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம், வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் இன்றி மோட்டார்சைக்கிள் செலுத்திய நபருக்கு 87ஆயிரத்து 500 ரூபா அபராதமும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு மாதகால சிறைத்தண்டனையும் விதித்து மஹர இலக்கம் 01 நீதிமன்ற நீதவான் காஞ்சனா டி சில்வா உத்தரவிட்டார்.

இதேவேளை இரண்டு மாத சமூக சேவை செய்யவும் உத்தரவிடப்பட்டது.கடந்த செவ்வாய்க்கிழமை (21) மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.மாபிம, ஹெயன்துடுவ பகுதியைச் சேர்ந்த நபரொருவருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# டீசல் பவுசரில் மண்ணெண்ணெய் கலப்பு

## சந்தேக நபரொருவர் கைது

(ஹனபி எம் தாஸீம்)

டீசல் பவுசரில் மண்ணெண்ணெய் கலந்ததாக சந்தேகிக்கப்படும் எரிபொருள் பவுசருடன் சந்தேகநபரொருவரை கிரிபத்கொட பொலிஸார் நேற்று முன்தினம் (22) இரவு கைதுசெய்துள்ளனர்.

இந்த பவுசரில் சுமார் 5000 லீற்றர் டீசல் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதோடு, மேலதிக விசாரணைகளுக்காக அவை அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபர் ஹங்வெல்ல, அம்புல்கம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (23.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 182.8186 | 192.2887 |
| கனேடியன் டொலர் | 203.4069 | 212.0479 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.6341 | 42.2113 |
| யூரோ | 304.7681 | 317.2322 |
| ஜப்பான் யென் | 1.8725 | 1.9479 |
| சிங்கப்பூர் டொலர் | 215.4707 | 225.3672 |
| ஸ்ரேலிங் பவுன் | 361.0603 | 374.9310 |
| சுவிஸ் பிராங் | 322.4495 | 337.3578 |
| ஐ.அ. டொலர் | 294.4667 | 303.2450 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 792.3234 |
| குவைட் | குவைட் தினார் | 968.5381 |
| ஓமான் | ஓமான் றியால் | 775.9276 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.9140 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.6189 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.3141 |

# ஆயிரமாவது வாரத்தின் குத்பா நேரடி அஞ்சல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை கடந்த 2024ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கொழும்பு, கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலின் வாராந்த குத்பாப் பிரசங்கத்தை நேர்முக அஞ்சல் செய்து வருகின்றது.

இந்நிலையில், ஆயிரமாவது வாரத்தின் குத்பாப் பிரசங்க நேரடி அஞ்சல் இன்று பிற்பகல் 1.15 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஒலிபரப்பாகவுள்ளது.

இப் பிரசங்கத்தை முதல் முதலாக நிகழ்த்திய அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.வை.எம்.றிஸ்வி முப்தி ஆயிரமாவது குத்பா பிரசங்கத்தையும் நிகழ்த்தவுள்ளமை விசேட அம்சமாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மேற்குறித்த பள்ளிவாசலின் குத்பா பிரசங்க நேர்முக அஞ்சலை ஆரம்பித்து வைத்த பெருமை முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளரும் தற்போதைய பகுதி நேர உத்தியோகத்தருமான எம்.இஸட்.எம்.அஹமட் முனவ்வரையே சாரும்.

இதேவேளை, இக் குத்பா பிரசங்கத்தை ஆரம்பம் முதல் இன்றுவரை தயாரிப்பாளர் எம்.எச்.எம். ரீசா தொகுத்து வழங்குகிறார். குறித்த பிரசங்கம் அன்று முதல் இன்று வரை எவ்வித இடையூறுமின்றி நேரடி அஞ்சல் இடம்பெற்று வருவதற்கு பள்ளிவாசலின் தற்போதைய, கடந்த கால நிர்வாகிகளின் ஒத்துழைப்பும் பிரதான காரணமாகும்.

# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



கண்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கருப்பையா கேசகமூர்த்தி கடந்த வெள்ளிக்கிழமை(17) கல்கிஸை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி நுவன் தாரக ஹீனடிகல முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை பழைய மாணவரான இவர், மலையக கலை கலாசார (இரத்தின தீபம்) சங்கத்தின் கொழும்பு மாவட்ட உறுப்பினரும் இலங்கை மனித உரிமை அமைப்பின் உறுப்பினரும் LIONS கொழும்பு மாவட்ட உறுப்பினரும் சட்றன் இலக்ரிகள் சட்றன் என்ரபிரைசஸ் உரிமையாளருமாவார்.

# வாழ்க்கைப் பாடம்

**ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்**

## றிஸ்க் என்றால் என்னவென்று தெரியுமா?

*ஒருவர் ஆகாரத்தையும் பொருட்செல்வத்தையும் பெற்றிருப்பது மாத்திரமல்ல றிஸ்க்; உடல் ஆரோக்கியத்தைப் பெற்றிருப்பது றிஸ்க்; நல்ல வாழ்க்கைத் துணைவியைப் பெற்றிருப்பது றிஸ்க்; நல்ல பிள்ளைகளைப் பெற்றிருப்பது றிஸ்க்; நல்ல நண்பர்களைப் பெற்றிருப்பது றிஸ்க்.*

*அறிவும் ஒரு வகை றிஸ்காகும். இவ்வாறு றிஸ்கின் வகைகள் பல. அதன் பட்டியல் மிக நீண்டது.*

*றிஸ்குடைய வகைகளில் மிகச் சாதாரணமானதே பொருட் செல்வம் - உணவு, உடை, காசு, பணம் முதலியன.*

*றிஸ்கில் சிறந்தது நல்ல வாழ்க்கைத் துணை; நல்ல ஸாலிஹான பிள்ளைகள்.*

*அதில் உயர்ந்தது உடல்நலம்; சிறப்பிடம் பெறுவது அறிவு ஞானம். றிஸ்கில் முழுமையானது அல்லாஹ்வின் திருப்தி; திருப்பொருத்தம்.*

*“அல்லாஹ்வின் திருப்தி தான் மிகப்பெரியது . அதுதான் மகத்தான வெற்றி.” (9:72)*

*றிஸ்கின் வகைகளில் மொத்தமானதும் முழுமையானதுமான றிழா எனும் அல்லாஹ்வின் திருப்தியை அடையும் பாதையில் முழு வீச்சோடு பயணிப்போம்!*

*அனைத்து வகையான றிஸ்குகளையும் வழங்குபவன் அல்லாஹ்வே. அவனே றஸ்ஸாக். அரசனும் ஆண்டியும் பணக்காரனும் ஏழையும் தொழில் அதிபரும் தொழிலாளியும் அறிஞனும் பாமரனும் ஆசிரியனும் மாணவனும் அனைவரும் றஸ்ஸாக்குடைய அப்துகளே - அப்துர் றஸ்ஸாக்குகளே அன்றி அவர்களில் எவரும் றஸ்ஸாக்குகளல்ல என்ற பேருண்மையையும் மனதிற்கொள்வோம்.*

# உணவுப் பாதுகாப்புக்காக துல்லியமான தரவுகள் - தகவல்கள் கட்டமைப்பை உருவாக்குவது குறித்து அரசு முக்கிய கவனம்



தேசிய உணவுப் பாதுகாப்புக் கொள்கைக் கட்டமைப்பை நிறுவுதல், அத்தியாவசிய உணவுப் பொருள் தகவல் கட்டமைப்பைப் பராமரித்தல் குறித்து அரசாங்கம் கவனஞ்செலுத்தியுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதற்காக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க உள்ளிட்ட உணவுக் கொள்கை மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (22) ஜனாதிபதி அலுவலகத்தில் முதல் முறையாகக் கூடினர்.

அனைத்து பிரஜைகளுக்கும் பாதுகாப்பான, சுகாதாரப் பாதுகாப்பான மற்றும் நிலையான உணவுக் கட்டமைப்பொன்றை உறுதிசெய்யும் அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றுவது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் நோக்கமாகும்.

உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதில் தரவுகளும் தகவல்களும் மிக முக்கியமானவையென்றும், அவையின்றி முடிவுகளை எடுக்கும் அபாயத்தை எதிர்கொள்ள இந்த அரசாங்கம் இனியும் தயாரில்லையென்றும் எனவே, துல்லியமான தரவுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அதிக முன்னுரிமையளிப்பது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

நேரடி பாவனைக்காகவும் கோழி மற்றும் முட்டைக் கைத்தொழிலுக்குத் தேவையான கால்நடை தீவனம், பியர் உற்பத்தி போன்ற மனித நுகர்வு உள்ளிட்ட அனைத்து கைத்தொழில்களுக்கும் உள்ளீடுகளாக அரிசியை வழங்குவது குறித்து அபிவிருத்தியடைந்த விவசாயக் கொள்கையை நடைமுறைப்படுத்துகையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென விவசாய அமைச்சர் இங்கு மேலும் தெரிவித்தார்.


மேலும், நாட்டு மக்களின் உணவு நுகர்வு தொடர்பாக ஆய்வு செய்யவேண்டுமெனவும் ஆரோக்கியமான மக்களை உருவாக்கவும் உணவு விரயத்தைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குழு உறுப்பினர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

தேசிய உணவுப் பாதுகாப்புக் கொள்கைக் கட்டமைப்பை நிறுவுதல், அத்தியாவசிய உணவுப் பொருள் தகவல் கட்டமைப்பைப் பராமரித்தல், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் புதிய திட்டத்தை உருவாக்குதல் மற்றும் அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கவும் விநியோகத்துக்கு திட்டமொன்றைத் தயாரித்தல் ஆகிய பல விடயங்கள் குறித்தும் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு, உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் சந்தை முகாமைத்துவம் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

பிரதமரின் செயலாளர் ஜி.பி. சபுதந்திரீ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் அடங்கிய உணவுக் கொள்கை மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# அனர்த்தங்களையும் சந்தேகங்களையும் மையப்படுத்தி முஸ்லிம் மீடியா போரத்தினால் இரு நூல்கள் வெளியீடு






ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள 'உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் - மறைகரம் வெளிப்பட்டபோது' மற்றும் 'நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள் - முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களை களைதல்' ஆகிய இரு மொழி பெயர்ப்பு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் எதிர்வரும் வியாழக்கிழமை 30ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு-7இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.


பேராசிரியர் ராஜன் ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய "SRI LANKAS EASTER TRADEDY Wheh the deep state gets out of its depth" என்ற ஆங்கில நூலை முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் பி.ஏ. தமிழில் மொழிப் பெயர்த்துள்ளார்.

அன்று வெளியிடப்படும் அடுத்த நூல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆங்கிலத்தில் எழுதி வெளிவந்த 'WE ARE A PART NOT APART -Demystifying Myths Against Muslims of Sri Lanka' என்ற நூலின் தமிழாக்கம் ஆகும்.

இந்த நூல்கள் இரண்டினதும் ஆய்வுரையை பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் நிகழ்த்துவதோடு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.சுஹைர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தக்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், என்.எம்.அமீன் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

இவ்விரு நூல்களும் அண்மைக்காலத்தில் இலங்கையை உலுக்கிய அதிர்ச்சியான சம்பவங்களையும், அச்சுறுத்தல்களையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டவை.

# வெளிநாட்டு சிகரட்களுடன் ஒருவர் கைது



**(ரஸீன் ரஸ்மின்)**

வெளிநாட்டில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒருதொகை வெளிநாட்டு சிகரட்களுடன், சந்தேக நபர் ஒருவர் கைது புத்தளம் - பாலாவி பகுதியில் நேற்று முன்தினம் (22) கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் 40 வயதுடையவர் எனவும் இவர் புத்தளம் - பாலாவி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாலாவி விமானப்படை புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், புத்தளம் விசேட அதிரடிப் படையினர் பாலாவி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 15ஆயிரத்து 800 வெளிநாட்டு சிகரட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த 15800 வெளிநாட்டு சிகரட்களை சந்தேக நபர் 20 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்ததாகவும், இதன்போது அதிரடிப் படையினர் முகவர்களை நியமித்து வெளிநாட்டு சிகரட்களை கொள்வனவு செய்யும் போர்வையில் சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர்.

# பழங்குடி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க மூன்று மாதங்களுக்குள் அவசியமான சட்ட நடவடிக்கைகள்



பழங்குடி மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட பாராளுமன்ற சட்ட மூலத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக மற்றும் பழங்குடி மக்களின் அடிப்படை உரிமைகள் குறித்துக் காணப்படும் சட்டச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கு சுற்றாடல் அமைச்சு ஏற்பாடு செய்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் (22) பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

பழங்குடி மக்களின் வரலாற்றுப் பெறுமதி தொடர்பாகத் தெளிவுபடுத்திய இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலெத்தன், தற்போது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பிரதமரிடம் முன்வைத்தார். ஐக்கிய நாடுகள் பிரகடனத்துக்கிணங்க தயாரிக்கப்பட்ட பழங்குடி மக்களின் உரிமைகள் தொடர்பான சட்டம் குறித்தும் பழங்குடியினரின் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்திய ஆதிவாசி மக்களின் தலைவர், இதுவரை காலமும் இருந்த அரசாங்கங்கள் ஒவ்வொரு நடவடிக்கைகளை எடுத்தாலும் அப்பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு கிடைக்கவில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, பழங்குடி மக்கள் நாட்டின் வரலாற்றுச் சொத்து என்றும், அவர்களைப் பாதுகாத்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுப்பது அத்தியாவசியமானதென்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி வலியுறுத்தினார்.

சுற்றாடல் அமைச்சினூடாக ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவசியமான சட்ட விதிகளை அங்கீகரித்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதாகவும் சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி சுட்டிக்காட்டினார்.

அதற்காக காணப்படும் சட்டம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக சுற்றாடல் அமைச்சு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் தெளிவுபடுத்தினர்.


# சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி ஓமானில் தொழில்செய்ய அந்நாட்டு அரசு தடை

சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி ஓமான் நாட்டுக்கு தொழில் வாய்ப்புக்காக வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு ஓமான் நாட்டிலுள்ள இலங்கைக்கான தூதுவராலயம் ஓமான் அரசாங்கத்தின் பொலிஸ் அறிவித்தல் ஒன்றை மேற்கோள் காட்டி அறிவித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி ஓமான் நாட்டில் தொழில்செய்ய முடியாதென்றும் அந்த விசாவை உபயோகித்து அதனை தொழில் வாய்ப்புக்கான விசாவாக மாற்ற முடியாதென்றும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஓமான் அரசாங்கம் சட்டரீதியான தொழில் வாய்ப்பை வழங்கும்போது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் (SLBFE) வெளியிடப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்டதான வழிகள் மற்றும் வழிகாட்டல்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டுமென மஸ்கட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகம் இலங்கையின் தொழில் தேடுபவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# செட்டிக்குளத்தில் 40 ஏக்கர் வயல் காணிகள் தொடர் மழையால் வெள்ளத்தில் மூழ்கின





வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர் மழை காரணமாக செட்டிக்குளம் ஆண்டியாபுளியங் குளம், ராமையன்குளம் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வயல் காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக, வவுனியா பாவற் குளம் குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு கீழுள்ள வயல் நிலங்களே இவ்வாறு பாதிப்படைந்துள்ளன.

மேலும், அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் நெற்பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நேற்று முந்தி னம் (22) முதல் வெள்ளநீர் தொடர்ச்சியாக பயிர்களுக்கு மேலாக மூடிப் பாய்ந்து செல்வதாகவும் இதனால் தமது விவசாயம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது வாழ்வாதாரம் கேள்விக்குறி யாகியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

# வவுனியாவில் கனமழை காரணமாக 67 பேருக்கு நிவாரணம் வழங்குமாறு அரசாங்க அதிபர் உத்தரவு



தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் இடம் பெயர்ந்து தனிமைப் படுத்தப்பட்ட 19 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேருக்கு நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கை களை எடுக்குமாறு வவுனியா மாவட்டச் செயலாளர் பி.ஏ.சரத்சந்ர அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அந்தியபுளியங்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பீடியா பண்ணைக் கிராமம், வவுனியாவிலிருந்து சுமார் நாற்பது கிலோமீற்றர் தொலைவில் மிகவும் கடினமான சூழலில் அமைந்துள்ள கிராமமாகும்.

பிரதான வீதியிலிருந்து ஆறு கிலோமீற்றர் தொலைவில் காட்டுப் பாதையில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் பாதுகாப்பான மையத்தை அமைக்கக்கூட ஒரு நிரந்தரக் கட்டிடம் இல்லை. மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வந்த இந்தக் குடும்பங்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தன.

டிராக்டர்கள் மற்றும் லொறிகளைப் பயன்படுத்தி அதற்குள் தங்கியிருக்கின்றனர். குறித்த பிரதேசத்தை நேரில் சென்று பார்வையிட்ட மாவட்டச் செயலாளர், இந்த மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் தங்கு மிடத்தை வழங்க உடனடி நடவ டிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# இஸ்லாஹியா அரபுக் கல்லூரி - மலேசியா இஸ்லாம் மேலாகா பல்கலை இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம்




மாதம்பே இஸ்லாஹியா அரபுக் கல்லூரி மற்றும் மலேசியா இஸ்லாம் மேலாகா பல்கலைக்கழகம் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் கைச்சாத்திட்டன.

இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரித் தலைவர் அப்துல் வாஹித் வரவேற்புரையாற்றினார். இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி மற்றும் மலேசியா இஸ்லாம் மேலாகா பல்கலைக்கழக ஆவணப்படம் காணொளிக் காட்சி திரையிடப்பட்டது.

இஸ்லாம் மேலாகா கல்வி மற்றும் சர்வதேச விவகார பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி அனஸ் பின் தாஜுதீன் மற்றும் இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி Rector எம். இசட். எம். முபீர் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம், இஸ்லாம் மேலாகா பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் Prof. Datuk Dr. Haj. Mohamed Taib Bin Hj Dora, ஈரான் இஸ்லாமிய குடியரசின் முன்னாள் தூதுவர் உமர் கமில், முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மற்றும் அரபுக் கல்லூரியின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் அதிதிகளுக்கு பாராட்டுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

# போலியான மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்த வைத்திய நிபுணருக்கு விளக்கமறியல்

போலியான மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மயக்க மருந்து நிபுணரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவரின் உடல்நிலையை பரிசோதித்த ஐந்துபேர் கொண்ட மருத்துவக் குழு சமர்ப்பித்த அறிக்கையை பரிசீலித்த பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

வரி அனுமதிகளைப் பயன்படுத்தி வாகனங்களை இறக்குமதி செய்வதாக உறுதியளித்து மற்றைய மருத்துவர்களிடமிருந்து பெறப்பட்ட நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறி, சந்தேகநபர் மீது சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்தார்.

முன்னதாக, மருத்துவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும் கூறி நீதிமன்றத்தில் மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்.

இருப்பினும், நீதிமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடியாதளவுக்கு எந்த நோயாலும் மருத்துவர் பாதிக்கப்படவில்லை என்று மருத்துவக் குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியது.

பின்னர் மருத்துவர் தவறான மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்த தன் மூலம் நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்த முயன்றதாகத் தீர்மானித்து, பெப்ரவரி 13வரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.







**மேமன் மனிதநேய சங்கம் தரம் ஒன்று மாணவர்களுக்கு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 250 பாடசாலைப் பைகளை வழங்கியது. இந்நிகழ்வு மேமன் மனிதாபிமான சங்கத்தின் தலைவர் ஏ.எல்.அன்வர் தலைமையில் புனித செபஸ்தியான் சிங்கள மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.**

# அரிசி பதுக்கல் தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபையினால் சுற்றிவளைப்பு

## விலைப்பட்டியல் காட்சிப்படுத்த தவறிய வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை



(பாறுக் ஷிஹான்)

அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி விற்பனை நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு நேற்று அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்டது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார தலைவரின் ஆலோசனையுடன் நிறைவேற்றுப் பணிப்பாளார் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளினால் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இத்திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை பகுதியில் உள்ள அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி வர்த்தக நிலையங்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு எச்சரிக்கையுடன் அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் பல அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றத்தினூடாக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரிசி பதுக்கலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தொடர்பில் அறியத்தருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், சுற்றிவளைப்பின்போது சுமார் 20க்கும் மேற்பட்ட அரிசி விற்பனை நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தத் தவறிய வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

# உயர்பதவிக்கு முஸ்லிம்களை புறக்கணிப்பது குறித்து அரசதரப்பு எம்.பிக்கள் மௌனம்

## இது கவலையளிப்பதாக இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

அரசாங்கம் அடுத்தடுத்து முஸ்லிம்களை புறக்கணித்து வருகின்ற போதிலும் அரசிலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுகுறித்து கவனம் செலுத்தாது மௌனமாக இருப்பது முஸ்லிம் சமூகத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் முஸ்லிம்கள் புறக்கணிப்பு விடயத்தில் தற்போது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் பேசுபொருளாகியுள்ளது. சிரேஸ்டத்துவ அடிப்படையில் முன்னிலையிலிருந்த ஒருவரை விடுத்து புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் ஊடகங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. விடப்பட்டவர் முஸ்லிம். இவர் முஸ்லிம் என்ற காரணத்துக்காக விடப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுள்ளது.

நீதித்துறை நியமனங்களில் கூட முஸ்லிம் சமூகத்துக்கு நீதியில்லை என்றால் இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் எப்படி நியாயமான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் அடுத்தடுத்து புறக்கணிக்கப்படுகின்ற போதிலும் அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவை குறித்து இதுவரை எதுவும் பேசாது மௌனம் காப்பது முஸ்லிம் சமூகத்தில் பெருங்கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் குறித்து இப்போது பேசுகின்றது. அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்குதல் மற்றும் ஏற்றாத்தாழ்வுகளை ஒழித்தல் என இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இதுபோன்ற புறக்கணிப்பு செயற்பாடுகளைப் பார்க்கும் போது எங்கே சம உரிமை உள்ளது. எப்படி ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. எந்தத் திட்டமும் கடதாசியில் இருக்கலாம். அது வாசிப்பதற்கு திருப்தியாகத்தான் இருக்கும். நடைமுறையில் அது இல்லை என்றால் அதனால் என்ன பயன் ஏற்படும் என்பதையும் கேட்க விரும்புகிறேன். எனவே, இந்த அரசாங்கமும் கோட்டாபயவின் முஸ்லிம் விரோத வழியில் பயணிப்பதான சந்தேகமே இப்போது அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது என்றார்.

## மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டைக்கு ஜப்பானிய தூதுவர் விஜயம்



(மட்டக்களப்பு)

இலங்கை நாட்டுக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ இசோமட்டா உள்ளிட்ட தூதுவராலய அதிகாரிகள் குழுவினர் புதன்கிழமை(22) மட்டக்களப்பிலுள்ள பல சுற்றுலாத்தலங்கள் உள்ளிட்ட சமய தலங்களையும் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது குறித்த தூதுவர் உள்ளிட்ட குழுவினர் மட்டக்களப்பில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த சுற்றுலாத் தலமாக திகழும் ஒல்லாந்தர் கோட்டையை பார்வையிட்டதுடன், மட்டக்களப்பின் சிறப்பம்சங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்துக்கான தமது விஜயம் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை குறித்த தூதுவர் உள்ளிட்ட குழுவினர் திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மல்வத்தையில் கசிப்புடன் ஒருவர் கைது

(திகாமடுல்ல செய்தியாளர்)

சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு விற்பனைக்காக இருந்த கசிப்பையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவினர் கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை(21) இரவு 08.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது மல்வத்தை, திருவள்ளுவர் புரம் பகுதியில் 22 வயதுடைய சந்தேக நபர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து ஒருதொகை கசிப்பு மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.நஸார் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் சிகரம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் பொலித்தீன் பாவனையைத் தவிர்த்து சூழற் தொகுதியைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் பிரதேசத்தில் பல இடங்களில் விழிப்புணர்வு பலகையை காட்சிப்படுத்தி வருகின்றனர். அதன் தொடரில் செவ்வாய்க்கிழமை (21) வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை வளாகத்திலும் விழிப்புணர்வு பலகையை காட்சிப்படுத்தியுள்ளனர். இதன்போது சிகரம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் செயலாளர் எஸ்.ஐ.எம்.தௌபீக், பொருளாளர் ஐ.பதுர்தீன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜெமீல், தாதிய உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)

# மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்துக்கு மின்னொளி பொருத்தல்



(பெரியநீலாவணை செய்தியாளர்)

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்துக்கு 16 மில்லியன் ரூபா செலவில் மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த மைதானத்துக்கு நவீன மின்னொளியை பொருத்தித் தருமாறு பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், சமூக அமைப்புக்கள், சங்கங்கள், கழகங்களின் பிரதிநிதிகள் என பலரும் நீண்ட காலமாக பிராந்திய அரசியல் தலைவர்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த மைதானத்துக்கு மின்னொளி பொருத்துவதற்கென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷாரப் முதுநபீன் 02 மில்லியன் ரூபா நிதியையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் 14 மில்லியன் ரூபா நிதியையும் ஒதுக்கீடு செய்திருந்தனர்.

இந்த வேலைத்திட்டத்தை கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை ஆகியன முன்னெடுத்திருந்தன. இவர்களின் அனுமதிக்கு அமைய தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பொறுப்பளிக்கப்பட்டு தற்போது அதி நவீன மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நவீன மின்கம்பங்களைக் கொண்டு நீண்ட கால பயன்பாட்டுக்கு ஏற்றாற்போல் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என பிரதேச விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில், தற்போது இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, களுவதாவளைக் கிராமத்திலிருந்து இயங்கிவரும் சமூக பொருளாதார கல்வி அபிவிருத்தி சங்கத்தினால் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு “கற்றலுக்கு கரம் கொடுப்போம்” எனும் தொனிப்பொருளின்கீழ் அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று(23) களுதாவளை மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும் இவ்வமைப்பின் கல்விப் பிரிவின் தலைவருமான க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

மேலும் இதன்போது கோட்டக் கல்விப் பணிப்பாளர் அருள்ராசா, களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய தலைவரும் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளருமான க.பாஸ்கரன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அவ்வமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள 35 பாடசாலைகளைச் சேர்ந்த 550 மாணவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான கற்றல் உபரகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

களுதாவளையை சேர்ந்த கட்டாரில் தொழில்புரியும் உறவுகளின் பெரும் பங்களிபோடு இயங்கிவரும் சமூக பொருளாதார கல்வி அபிவிருத்திச் சங்கம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களை இனம்கண்டு அம்மாணவர்களுக்கான கட்டல் உபகரணங்களை இவ்வாறு வருடாந்தம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை பாலம்போட்டாறு அருள்மிகு பத்தினி அம்மன் ஆலயம் வெள்ளத்தில் மூழ்கி காணப்படுவதை காணலாம். (கிண்ணியா செய்தியாளர்)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)



அக்கரைப்பற்று முதலியார் வீதியைச் சேர்ந்த ஆதம்பாவா நூறுல்லாஹ் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.சீ.றிஸ்வான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அரச சுகாதார முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் இவர், இந்தியாவின் காண்பூர் பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாக பட்டதாரியாவார்.

அக்கரைப்பற்று அல்-பாத்திமியா வித்தியாலயம் மற்றும் அக்-அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழு செயலாளராகவும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றி வருவதோடு அபூபக்கர் ஆதம்பாவா உதுமாலெவ்வை அவ்வாக்குட்டி தம்பதியின் புதல்வராவார்.

## மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு




(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி சமூக நலனுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக 10ஆவது வருடமாக இவ்வருடமும் வறுமை கல்விக்கு தடையல்ல எனும் தொனிப்பொருளில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை(19) ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

காத்தான்குடி மற்றும் அதனை சூழவுள்ள கிரமங்களில் உள்ள 32 பாடசாலைகளைச் சேர்ந்த 925 மாணவர்களுக்கும் மற்றும் காத்தான்குடி, ஆரையம்பதி பிரதேச சபைகளுக்குட்பட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவுகளினால் தெரிவு செய்யப்பட்ட 79 மாணவர்களுக்குமாக மொத்தம் 1004 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர், நகர சபை செயலாளர் திருமதி எம்.ஆர்.எப்.றிப்கா சபீன், பிரதேச கல்விப்பணிப்பாளர் ஏ.ஜி.எம்.ஹக்கீம், உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ். சில்மியா, நகர சபை கணக்காளர் ஏ.எஸ்.மனாசிர் அஹ்சன் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்பாடு (Enic Project) தொடர்பாக காரைதீவு பிரதேச செயலகத்தின் கீழ் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜி. அருணனின் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபனின் தலைமையில் புதன்கிழமை (22) ஆட்பதிவு திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது. (மாளிகைக்காடு செய்தியாளர்)

# கொள்ளளவையும் தாண்டி கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் உயர்வு: 10 வான் கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றம்

## ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி வேளாண்மை பாதிப்பு

### நீர்ப்பாசன பொறியியலாளர் சிந்தக்க சுரவீர தெரிவிப்பு



*(சீனக்குடா செய்தியாளர்)*

கந்தளாய் குளத்தின் சாதாரண நீர்மட்ட உயரமானது 38.75 அடி ஆகும். ஆனால், குளத்தின் தற்போதைய நீர்மட்டம் 38.87 அடியாக உயர்ந்துள்ளதாக கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் சிந்தக்க சுரவீர தெரிவித்துள்ளார்.

கந்தளாய் குளத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

குளத்தின் நீரின் சாதாரண மொத்த சேமிப்பு அளவு, 1,14,000 ஏக்கர் அடியாகும். தற்போது இது 1,14,875 ஒரு ஏக்கர் அடியாகக் காணப்படுகின்றது. இது சாதாரண மொத்த சேமிப்பு அளவை விட அதிகமாகும். இதன் காரணமாக, புதன்கிழமையிலிருந்து (22) இந்தக் குளத்தின் 10 வான் கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வான் கதவும் 01 அடி திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், செக்கனுக்கு 2,110 கன அடி நீர் வெளியேற்றப்படுவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தொடர்ச்சியாக ஒவ்வொரு செக்கனும் நீர் இங்கிருந்து இவ்வாறு வெளியேற்றப்படுவதால், கந்தளாய், வெண்டராசன், வான்எல மற்றும் பேரமடுவ ஆகிய பகுதிகளிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இம்முறை வேளாண்மைச் செய்கையில் பாரிய பாதிப்பை சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம் தொடர்பான விளக்கம் மக்களையும் அதிகாரிகளையும் சென்றடையவில்லை

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவிப்பு

*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் சம்பந்தமாக நாம் தற்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இத்திட்டமானது முக்கியமானதொரு வேலைத்திட்டமாகும். இது தொடர்பில் பிரதமர் சபையில் தெளிவுபடுத்தியிருந்தாலும் இன்னும் மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் அது குறித்த தெளிவான விளக்கம் சென்றடையவில்லை. அதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறும் இவ்வேலைத்திட்டத்தை தாம் வரவேற்பதோடு, முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

புதன்கிழமை (22) பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் பல நாடுகளில் இவ்வேலைத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது. குறிப்பாக, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் இவ்வாறான வேலைத்திட்டங்களினூடாக பொருளாதார ரீதியிலும் அபிவிருத்தியிலும் பெரிய மாற்றங்களை அடைந்துள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறான நல்ல எண்ணத்துடன் இங்கு கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டால் அவ்வேலைத்திட்டம் சிறப்பாக வளர்ச்சியடைந்து நாட்டுக்கு நன்மை சேர்க்க நாம் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பாக, சிங்கப்பூர் உள்ளிட்ட ஏனைய நாடுகள் இத்திட்டத்தினூடாக எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்று பார்க்கும்போது உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது. எனவே, நாம் உள்ளூராட்சி மன்றங்களை இத்திட்டத்தில் அதிகம் பயன்படுத்தவேண்டும். அதற்கான ஆளணி, இயந்திர வசதிகள் எம்மிடம் இருக்கின்றன. ஆதலால் அவர்களுக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்தி அவர்களின் ஒத்துழைப்புடன் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளல், வடிகான் துப்புரவு, மரங்களை நடுதல், கிராமங்களை அழகுபடுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளலாம்.

அதேபோல், தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக அம்பாறை சேனநாயக்க சமுத்திரம் திறந்திருப்பதால் அதிகமான வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. ஆயிரக்கணக்கான வயல்நிலங்கள் வெட்டுவதற்கு ஆயத்தமான நிலையில் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பொலனறுவை மாவட்ட விவசாயிகள் வெள்ள அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்''- என்றார்.





***திருகோணமலை,குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட கைநாட்டான் குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் நிலையில் காணப்படுவதாகவும் அதனை புனரமைக்குமாறும் பொதுமக்கள் மற்றும் விவசாய சம்மேளனத்தினர்இணைந்து பிரதேச சபையின் செயலாளரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர் வெ.இந்திரஜித்தின் ஆலோசனைக்கமைய பிரதேச சபை ஊழியர்கள், இராணுவத்தினர், விவசாய சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து குறித்த கைநாட்டான் அணைக்கட்டின் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கிண்ணியா செய்தியாளர்)***

# ஆடு, மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் கைது

*(பாறுக் ஷிஹான்)*

ஆடுகள் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவற்றை மருதமுனை பகுதியில் களவாடி சம்மாந்துறை பகுதியில் விற்பனை செய்யச் சென்றிருந்த சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதன்கிழமை (22) இடம்பெற்றுள்ளது. சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இக்கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் சந்தேக நபர்கள் வசமிருந்து அவர்கள் விற்பனைக்காக கொண்டுசென்ற மூன்று ஆடுகள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பகுதியில் கடந்த 21ஆம் திகதி மூன்று ஆடுகள், வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள் என்பன திருடப்பட்டுள்ளதாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய செயற்பட்ட சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், சம்மாந்துறை தாருஸ்ஸலாம் பாடசாலைக்கு பின்பகுதியில் வைத்து 21 வயதுடைய சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைதான சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது மற்றுமொரு சந்தேக நபரான 34 வயதுடையவர் சம்மாந்துறை ஹிஜ்ரா பள்ளிவாசலுக்கு அருகாமையில் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு பொலிஸாரினால் கைதான சந்தேக நபர்களில் 21 வயதுடைய சந்தேக நபர் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் 34 வயதுடைய சந்தேக நபர் பெரியநீலாவணை 02 - மருதமுனை பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் இரு சந்தேக நபர்களிடம் இருந்து திருடப்பட்ட மூன்று ஆடுகள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 4,790 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

***கிண்ணியா நகர சபைப் பிரிவுக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இவ்வீதியின் நடுவில் மாடுகள் நிற்பதால் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். எனவே, கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த கிண்ணியா நகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோருகின்றனர். (தம்பலகாமம் செய்தியாளர்)***



## அக்கரைப்பற்றில் ஸஹீஹுல் புகாரி ஷரீப்

அக்கரைப்பற்றில் வாழ்ந்து மறைந்த மூத்த உலமாப் பெருமக்களால் கடந்த 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சஹீஹுல் புகாரி மஜ்லிஸ் இற்றைவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அதற்கிணங்க, இவ்வாண்டுக்கான இம்மஜ்லிஸ் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தணி ஐ.நிஸாம் றஸ்ஸாகின் தலைமையில் நம்பிக்கையாளர் சபையினரின் பங்களிப்புடன் அக்கரைப்பற்று ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் கலாநிதி அல்-ஆலிம் எம்.ஐ.சித்தீக்கின் நெறிப்படுத்தலில் கடந்த 02ஆம் திகதி ஆரம்பமாகிய புகாரி ஷரீப் பெப்ரவரி முதலாம் திகதி தமாம் செய்யப்படும்.

இதனை முன்னிட்டு சுப்ஹுத் தொழுகையைத் தொடர்ந்து ஹதீஸ் பாராயணமும் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து ஹதீஸ் விளக்கவுரைகளும் தோடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் ஹிப்மு கல்லூரி பாடசாலை மாணவர்கள், ஆண்கள், பெண்கள் என பெருமளவானோர் கலந்து கொள்கின்றனர். பெண்களுக்காக பிரத்தியேக இட ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அண்ணனை கொலை செய்த தம்பி வாழைச்சேனை பொலிஸாரால் கைது

*(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)*

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலய வீதியைச் சேர்ந்த சீனி முஹம்மது முஹம்மது முஸம்மில் எனும் 41 வயதுடைய மூத்த சகோதரனை குத்திக்கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் தம்பியை வாழைச்சேனை பொலிஸார் நேற்று (23) முற்பகல் பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய பெருங்குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த தினேஷுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பெருங்குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சம்பத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் கொலைக்குப் பயன்படுத்திய ஆயுதத்தை மறைத்து வைத்துள்ள இடமும் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# பன்சேனை கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்









*(மட்டக்களப்பு)*

மண்முனை மேற்கு பன்சேனை கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அமைப்பின் தலைவர் கமலநாதன் ரகுகரன் தலைமையில் மட்டக்களப்பு தனியார் விடுதியில் புதன்கிழமை(22) இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.

2017ஆம் ஆண்டிலிருந்து அன்புநெறி கனடா அமைப்பினர் பன்சேனை கிராம வளர்ச்சித் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை மேற்கொண்டுள்ளனர். பன்சேனை கிராமத்தில் மருத்துவம், கல்வி, சமூக, பொருளாதாரத்திலான முன்னேற்றங்களை அன்புநெறி கனடா தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரால் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்போது அன்பு நெறி கனடா அமைப்பினரால் பயனடைந்தவர்களைக் கௌரவிக்கவும் வெற்றிகளைத் தெரியப்படுத்துவதற்கும் எதிர்கால அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானந்தி, அன்புநெறி கனடா தன்னார்வத் தொண்டு நிறுவன உப செயலாளர் சிவக்கொழுந்து வேணு, மண்முனை மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன், பன்சேனை பாரி பாடசாலை அதிபர் தே.பவலசிங்கம், பன்சேனை விவசாய அமைப்பின் தலைவர் ஐ.பாஸ்கரன் மற்றும் உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கடலரிப்பினால் கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் பாதிப்பு

## அவசர நடவடிக்கை எடுக்குமாறு பள்ளி நிர்வாகம் வேண்டுகோள்



**(பாறுக் ஷிஹான்)**

கடலரிப்பு காரணமாக கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் எல்லைச் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட நிலைமையைத் தொடர்ந்து கடலரிப்பின் தாக்கம் மிக வேகமாக இப்பகுதியில் ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென பள்ளிவாசல் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும், கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் பின்புறமாக அமைக்கப்பட்ட தென்னந்தோட்டமும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன. இது தவிர, அடிக்கடி தற்போது கடல் அலை சீற்றம் காரணமாக இப்பகுதிகள் கடலரிப்புக்குள்ளாகி பாரிய சேதங்களுக்குள்ளாகி வருகின்றன.

காலை முதல் மாலை வரை மப்பும் மந்தாரமுமாக காணப்படுவதுடன் இரவுவேளைகளில் மழையும் பெய்கிறது. அம்பாறை மாவட்டத்தின் குறிப்பாக கல்முனை, பெரியநீலாவணை, சாய்ந்தமருது, மருதமுனை, பாண்டிருப்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர் மற்றும் ஒலுவில் போன்ற பிரதேசங்களில் கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் கடலரிப்பு மிக கோரமாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக, இவ்வாறான காலநிலை மாற்றங்களாலும் கடலரிப்பு அதிகமாக ஏற்படுவதனாலும் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டிக்கழி திரௌபதாதேவி ஆலய காணியில் மீன்வாடி: உரிமையாளரை வெளியேறுமாறு பொதுமக்கள் கோரிக்கை

## ஆலய பரிபாலன சபையினரும் கண்டனம்

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு, மட்டிக்கழி ஸ்ரீ திரௌபதாதேவி ஆலயம் பராமரித்துவந்த அம்மன் பீடம் உள்ள காணியை மட்டு. மாநகர சபையினர் தனியார் ஒருவருக்கு மீன்வாடி அமைக்க முறைகேடாக வழங்கியிருந்தனர். குறித்த மீன்வாடி உரிமையாளரை அங்கிருந்து வெளியேறுமாறு கடந்த மாதம் மாவட்ட அபிவிருத்திக்குழு மற்றும் மனித உரிமை ஆணையம் கட்டளையிட்டும் அவரை அங்கிருந்து வெளியேற்றாமல் உள்ளதாகப் பொதுமக்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

பார் வீதியில் செழியன் பூங்காவுக்கு அருகில் கடற்கரைப் பகுதியில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணியை மட்டிக்கழி ஸ்ரீ திரௌபதாதேவி ஆலய நிர்வாகம் 50 வருடங்களுக்கும் மேலாக சட்டவிரோத மண்அகழ்வு மற்றும் காணி அபகரிப்பில் இருந்து பாதுகாத்து ஆலய உற்சவகாலங்களில் புனித மஞ்சள் நீராடுதல், கும்பஞ் சொரிதல் போன்ற புனித காரியங்களுக்காகப் பயன்படுத்தி வந்ததுடன் அங்கு வேல் நாட்டப்பட்டு அம்மன் பீடமும் அமைக்கப்பட்டு வழிபட்டு வந்தனர்.

இந்நிலையில், குறித்த காணியை கடந்த 2024ஆம் ஆண்டு மட்டு. மாநகர ஆணையாளர் அந்தக் காணி மாநகரசபைக்கு சொந்தமானது எனப் போலியான ஆவணங்களைத் தயாரித்து இந்தக் காணியை யாரேனும் பயன்படுத்துகின்றீர்களா என கிராமசேவகரிடமோ பொது அமைப்புகளிடமோ கிராம மக்களிடமோ கேட்டறியாது பிரதேச செயலாளரின் அனுமதியுமின்றி இந்து மக்களின் புனிதத் தன்மையை இழிவுபடுத்தி மீன்பிடி உரிமையாளர் ஒருவருக்கு மீன்வாடி அமைக்க குத்தகைக்கு வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக ஆலய நிர்வாகம் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அளித்த முறைபாட்டையடுத்து அவர்கள் மேற்கொண்ட விசாரணையில் பிரதேச செயலகத்தின் கீழுள்ள அரச காணியை மாநகரசபையினர் முறைகேடாகக் குத்தகைக்கு வழங்கியுள்ளனர் எனவும் மீன்வாடியை அங்கிருந்து அகற்றுமாறும் தெரிவித்திருந்தனர். அதேபோல் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் இந்த மீன்வாடியை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இருந்தபோதும், அரச திணைக்களம் மீன்வாடியை அகற்றும் செயற்பாட்டை இன்றுவரை செய்யாமல் உள்ளது.

இது இந்து மதத்துக்கும் மக்களுக்கும் செய்யும் அநீதி என ஆலய பரிபாலனசபையினரும் பொதுமக்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்கவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் நாய்களின் தொல்லை அதிகரிப்பு



*(மீராவோடை செய்தியாளர்)*

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வளாகத்தில் நாய்களின் தொல்லை நாளாந்தம் அதிகரித்துக் காணப்படுவதாக நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால், அங்கு சிகிச்சைக்காக வருவோரும் நோயாளிகளைப் பார்வையிட வருவோரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வைத்தியசாலை வளாகத்தில் அலைந்து திரியும் நாய்கள் நோய்த் தொற்றுக்குள்ளானவையாகக் காணப்படுவதால் அதனூடாக மனிதர்களுக்கும் நோய்த் தொற்று பரவக்கூடுமென்று மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

இவ்விடயங்களை வைத்தியசாலை நிர்வாகம் கவனத்திற்கொண்டு நாய்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
businessthamilan@gmail.com

# 2024ஆம் ஆண்டில் பல சாதனை விருதுகளுடன் மிளிரும் மக்கள் வங்கி

தேசிய மற்றும் சர்வதேச அளவில் உயரிய கௌரவங்களைக் கொண்ட மக்கள் வங்கி(People's Bank) 2024 இல் இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற மற்றும் கௌரவமான நிதி நிறுவனங்களில் ஒன்றாகத் தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த மதிப்புமிக்க கௌரவங்கள் வங்கியின் நிலையான வளர்ச்சிக்கும் நுகர்வோரை அதிகாரமளிக்கும் செயற்பாடுகளுக்கும் தேசிய பொருளாதார முன்னேற்றத்துக்கு வழங்கிய முக்கியமான பங்களிப்புகளுக்கும் சாட்சியமாக நிற்கின்றன. 63 வருட வரலாற்றில் மக்கள் வங்கி 15.2 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளது. 3 டிரில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட ஒருங்கிணைந்த சொத்துகளைக் குவித்து இலங்கையின் 750 இடங்களில் தனது செயற்பாடுகளை உறுதிப்படுத்தியுள்ளது. சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் மக்களுக்கு பரந்த வங்கிச் சேவைகளை வழங்குவதில் அதன் அர்ப்பணிப்பை இந்தச் சாதனை விளக்குகிறது.



2024ஆம் ஆண்டு எயுரோமனி விருதுகள் (Euromoney Awards for Excellence 2024) மூலம் இலங்கையின் சிறந்த டிஜிட்டல் வங்கியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது மக்கள் வங்கி டிஜிட்டல் மாற்றத்தில் குறிப்பிடத்தக்க திருப்புமுனையை எட்டியது. மேலும், மக்கள் வங்கி AICPA மற்றும் CIMA சிறந்த 20 தொழில் பணியிட விருதுகளில் ஒன்றாகப் பெயரிடப்பட்டது. இது அதன் ஊழியர்களுக்கு சாதகமான பணிச்சூழலை உருவாக்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது மேலாளர் கிளைவ் பொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில், “இந்த விருதுகளால் நாங்கள் கௌரவிக்கப்படுகிறோம். அவை எங்கள் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. இந்தப் பாராட்டுகள் எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளையும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும் பூர்த்தி செய்யும் வங்கித் தீர்வுகளை வழங்குவதில் எங்களுடைய அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன. சிறந்த சேவைக்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் டிஜிட்டல் மாற்றத்தால் நாங்கள் தொடர்ந்து வழிநடத்தப்படுவோம்.

கூடுதலாக, மக்கள் வங்கி 2024ஆம் ஆண்டு சிறந்த மேலாண்மை முறைகள் நிறுவன விருதுகளில் (Best Management Practices Company Awards -2024) பல பரிசுகளை வென்றது. இதில் அரச, அரை-அரச மற்றும் அதிகாரபூர்வ பிரிவு மற்றும் வங்கிகளுக்கான பொது நிர்வாகத்துறைப் பிரிவிலும் வெற்றி பெற்றது. LankaPay தொழில்நுட்ப விருதுகளில் வாடிக்கையாளர் வசதிக்காகவும் நிதிச் சேர்க்கைக்காகவும் வங்கி பல மெரிட் விருதுகளைப் பெற்றது. இதில் மிகவும் பிரபலமான டிஜிட்டல் கட்டணத் தயாரிப்புக்கான தங்க விருது (அரசு வங்கிகள் பிரிவு - இணைய மற்றும் இணைய வங்கி மற்றும் இந்த ஆண்டின் சிறந்த பொதுவான ஏடிஎம்(ATM) இயக்கி - ஏ பிரிவு விருது.) 2024ஆம் ஆண்டுக்கான தேசிய வணிக சிறந்த செயற்பாட்டு விருதுகளில் சிறந்த வங்கிச் சேவை மற்றும் செயற்றிறன் மேலாண்மை சிறப்புமாக விளங்குவதை மக்கள் வங்கி பெற்ற வெற்றி வங்கிச் துறையில் தனது தலைமைத்துவத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. கூடுதலாக வங்கி அதன் CSR முயற்சிகளுக்காக மெரிட் விருதுகளைப் பெற்றது மற்றும் உள்ளூர் சந்தையை அணுகுவதில் சிறந்து விளங்குதல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையில் சிறந்து விளங்குதல் ஆகிய இரண்டிலும் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

இணைய வங்கியில் முன்னணியில் இருக்கும் அதன் நிலையை உறுதிப்படுத்த வங்கியின் அர்ப்பணிப்பு பல விருதுகளுக்கும் வழிவகுத்தது. சிறந்த இணைய விருதுகள் 2024 இல் மக்கள் வங்கிக்கு சிறந்த வங்கி மற்றும் நிதி இணையதளத்துக்கான வெள்ளி வெற்றி வழங்கப்பட்டது. கூடுதலாக, உலக வணிக விமர்சனக் கட்டுரைகள் பத்திரிகை (Global Business Review Magazine Awards -2024) இலிருந்து விருதுகளைப் பெற்றது, இதில் சிறந்த இணைய வங்கித் தீர்வுகள் வழங்குநர், மக்கள் ஊதியத்துக்கான சிறந்த இணைய பணப்பை APP, வருடத்தின் சிறந்த வங்கிச் சேவை வழங்குநர் மற்றும் சிறந்த நுகர்வோர் இணைய வங்கி ஆகியவை அடங்கும். வங்கியின் கடன் அட்டை சேவைகள், Peoples Wave மொபைல் வங்கி APP, நிதி சேர்க்கைத் திட்டம் ஆகியவை இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பங்களிப்புகளை வழங்கியதற்காகப் பாராட்டப்பட்டது.

மேலும், வங்கியானது 2024இல் இலங்கையில் பெண்களுக்கான மிகச் சிறந்த பணியிடங்களில் ஒன்றாக, பதிலளிக்கும் மற்றும் மிகவும் நிலையான வங்கி என அங்கீகரிக்கப்பட்டது. வங்கியின் மிகவும் புதுமையான பெண்கள் அதிகாரமளிக்கும் முன்முயற்சிகள் Womens Tabloid Awards 2024 மற்றும் AICPA & CIMA Satyn பெண்கள் நட்பு பணியிட விருது - 2023ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பணியிடத்தில் சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மையை முன்னேற்றுவதற்கான நிறுவனத்தின் முயற்சிகளுக்கு கூடுதல் பாராட்டு வழங்கப்பட்டது.

அத்துடன், முக்கியமான அங்கீகாரங்களுக்கிடையில் மக்கள் வங்கி CMA Excellence in Integrated Reporting Awards 2024. இல் சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கை – வங்கித் துறை (அரச) இல் இரண்டாம் இடத்தைப் பெற்றது. மேலும், 2024 TAGS விருதுகளில் அரச வங்கித் துறையில் வெண்கல விருதைப் பெற்றது. இது அதன் தனிப்பட்ட வெளிப்படைத்தன்மை, நிர்வாகம் மற்றும் அறிக்கைத் தரங்களைப் பிரதிபலிக்கின்றது.

தனிநபர் பாராட்டுகளுக்கு மேலதிகமாக, மக்கள் வங்கி தனது இணைய சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றது, Slim Digis 2.4 விருதுகள் 2024 இல் இணைய புதுமையான உள்ளடக்கத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான வெண்கல விருதையும் அதன் நோக்கம் சார்ந்த இணைய சந்தைப்படுத்தல் பிரசாரத்துக்கான மெரிட் விருதையும் பெற்றுள்ளது.

வங்கியின் சிறந்த செயற்றிறன் பற்றிய அர்ப்பணிப்பு உலகளவில் அங்கீகரிக்கப்பட்டது. உலக வணிக சங்கம் (World Confederation of Business) மக்கள் வங்கி நிறுவன மேலாண்மையில் சிறப்புக்கான அங்கீகாரத்தை வழங்கியது.

2024 இல் பெற்ற அங்கீகாரங்கள், அதன் வாடிக்கையாளர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த வங்கிச் சேவைகளை வழங்கும் அதேவேளை, இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்க மக்கள் வங்கியின் தொடர்ச்சியான முயற்சிகளைச் சுட்டிக்காட்டுகிறது.

# LMD கணக்கெடுப்பில் வங்கியியல் துறையில் முதலிடம் பெற்றுள்ள கொமர்ஷல் வங்கி



நாட்டின் முன்னோடி வர்த்தக சஞ்சிகையான LMD இன் வருடாந்த வாடிக்கையாளர் சிறப்புக் கணக்கெடுப்பின் 2024 பதிப்பில், இலங்கையின் வங்கிகள் மத்தியில் சிறந்த சேவையை வழங்கி வருவதை முன்னிட்டு கொமர்ஷல் வங்கி முதலாவதாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

LMD கணக்கெடுப்பில் வங்கித் துறையில் சிறந்த சேவைக்காக கொமர்ஷல் வங்கியானது தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக இந்த முதல் ஸ்தானத்தைப் பெற்றுள்ளது.

இணையதள ரீதியாக நடத்தப் பட்ட இந்தக் கணக்கெடுப்புக்கு இந்த ஆண்டு 4,100 பதில்கள் கிடைக்கப்பெற்றன. 34 வகையான சேவை நிறுவனங்களில் சிறந்த சேவையை வழங்குவதாக அவர்கள் கருதும் ஸ்தாபனத்துக்கு வாக்களிக்குமாறு பதிலளித்தவர்கள் கேட்கப்பட்டனர்.

கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் கருத்துத் தெரிவிக்கையில், ‘‘இந்த வருடத்தை சிறப்புடனும் மகிழ்ச்சியுடனும் பூர்த்தி செய்வதற்கு இந்த விருதானது வழி வகுத்துள்ளது. வாடிக்கையாளர் சேவை என்பது வங்கியில் முதன்மையானது, மேலும், ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட தீர்வுகளை வழங்கும் வங்கியின் திறனை உள்ளடக்கியது. இது எங்கள் பலங்களில் ஒன்றாகும், மேலும் சேவைகளுக்கான டிஜிட்டல் அணுகலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும் தொடர்ந்து கவனம் செலுத்தும் பகுதியாக இது உள்ளது.


கொமர்ஷல் வங்கியின் வர்த்தக மூலோபாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக வாடிக்கையாளரின் நலன் விளங்குகிறது. சேவைகள் மற்றும் தயாரிப்புகளை தொடர்ந்து மேம்படுத்த வாடிக்கையாளர்களின் கருத்துகளை வங்கி தீவிரமாக ஒருங்கிணைக்கிறது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு அதிக தனிப்பயனாக்கப்பட்ட நிதியியல் தீர்வுகளை முன்கூட்டியே வழங்குவதற்காக தரவு பகுப்பாய்வுகளையும் பயன்படுத்துகிறது” - என்று பிரபாகர் கூறினார்.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும். மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது.

# All-in-One பிற்கொடுப்பனவு பக்கேஜ்களை அறிமுகம் செய்துள்ள SLT-MOBITEL

மொபைல் தொடர்பாடல் சேவைகளில் குறிப்பிடத்தக்களவு உயர்வு பதிவாகியுள்ள நிலையில், SLT-MOBITEL மொபைல் பிரிவினால் புரட்சிகரமான M+ பிற்கொடுப்பனவு பக்கேஜ்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவை வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்திருப்பதுடன், பெருமளவு உள்ளம்சங்களையும் கொண்டுள்ளன.

இந்த பக்கேஜ்கள் ஒப்பற்ற இணைப்புத்திறன், சௌகரியம் மற்றும் பெறுமதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், தனிநபர்களுக்கான பிற்கொடுப்பனவு மொபைல் அனுபவத்தை மாற்றியமைப்பதாகவும் அமைந்துள்ளது. மேலும், SLT-MOBITEL இன் தனித்தனி பிற்கொடுப்பனவு பக்கேஜ்கள், நாட்டின் வேகமான மொபைல் வலையமைப்பின் பின்புலத்தில் இயங்குவதுடன், நாடு முழுவதிலும் ஒப்பற்ற இணைப்புத்திறனை உறுதி செய்வதாக அமைந்துள்ளது.




புதிய M+ தனிநபர் பிற்கொடுப்பனவு தெரிவுகளினூடாக பரந்தளவு பாவனையாளர் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்திருப்பதுடன், நான்கு கட்ட இணைப்புத்திறன் மற்றும் அனுகூலங்களை வழங்குவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பக்கேஜ் மூலமாக Anytime Any App DATA Bundle (HD quality, without daily limits) வழங்கப்படுவதுடன், DATA roll over வசதியையும் கொண்டுள்ளது. அத்துடன், எந்தவொரு வலையமைப்புக்கும் UNLIMITED அழைப்பு வசதி, எந்த வலையமைப்புக்கும் 200 SMS, Facebook, WhatsApp மற்றும் YouTube பயன்படுத்த மேலதிகமாக 5GB போன்றவற்றுடன், மேலதிக டேட்டா பாவனைக் கட்டணமாக ஒரு MB க்கு 10 சதம் மாத்திரம் அறவிடப்படும்.

All-in-One பக்கேஜ்களினூடாக மேற்படி உள்ளம்சங்கள் வழங்கப்படுவதுடன், மீடியம் பிளானினூடாக Anytime Any App DATA ஆக 5GB, ரூ. 700 + வரிகளுடன் வழங்கப்படுகின்றது. லார்ஜ் பிளானினூடாக Anytime Any App DATA ஆக 10 GB, ரூ. 1000 + வரிகளுடன் வழங்கப்படுகின்றது. எக்ஸ்ட்ரா லார்ஜ் பிளானினால் ரூ. 1400 + வரிகளுக்கு Anytime Any App DATA 20 GB வழங்கப்படுவதுடன், அல்டிமேட் XXL பிளானினூடாக ரூ. 2200 + வரிகளுக்கு Anytime Any App DATA 40 GB வழங்கப்படுகின்றது.

அருகிலுள்ள SLT-MOBITEL கிளைக்கு விஜயம் செய்து வாடிக்கையாளர்கள் இந்த பக்கேஜ்களை இணைத்துக் கொள்ளலாம். விசேட add-on பக்கேஜ்கள் மற்றும் எனிடைம் டேட்டா பக்கேஜ்கள் போன்றவற்றை #170# டயல் செய்து அல்லது Self-care app இனுள் log செய்து செயற்படுத்திக் கொள்ளலாம்.

# சபுகஸ்கந்த கூரை மீதான சூரிய மின்சக்தி திட்டங்கள் மூலம் நிலைபேறான தன்மையை மேம்படுத்தும் யுனிலீவர் ஸ்ரீ லங்கா

யுனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம், சபுகஸ்கந்தவில் உள்ள தனது உணவு உற்பத்தித் தொழிற்சாலை மற்றும் விநியோக மையத்தில் அதிநவீன கூரை மீதான சூரிய மின்சக்தி தொகுதிகளை நிறுவியுள்ளது. இந்தத் திட்டமானது, உலகளாவிய ரீதியில் காணப்படும் நிறுவனத்தின் தளங்களில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்களை 100% ஆக மாற்றும் யூனிலீவரின் நோக்கத்தை நோக்கிய மற்றுமொரு படியாகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் மொத்தமாக 970kW மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதோடு, இரண்டு தொழிற்சாலைகளிலும் 1,672 சூரியசக்தி படலங்கள் மற்றும் அதற்கான இணைப்பு ஆதாரமாக 810Kva இன்வேர்ட்டர் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தொகுதியின் மூலம் வருடாந்தம் 1.25 மில்லியன் kWh மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தொழிற்சாலைகளுக்கு அவசியமான 33% மின்சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இந்தப் புதிய நிறுவலின் மூலம், ஹொரணை தொழிற்சாலை உள்ளிட்ட யுனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் ஒட்டுமொத்த சூரிய சக்தி திறன் 4MW ஆக அதிகரித்துள்ளது. இத்திட்டமானது, 2050 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியிலிருந்து 75% மின்சக்தி தேவையை உற்பத்தி செய்யும் நாட்டின் இலக்கை மேலும் வலுச்சேர்க்கிறது.



இதன் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் விநியோகச் சங்கிலி பணிப்பாளர் தமித் அபேரத்ன, “யுனிலீவர் ஸ்ரீ லங்காவில் நிலைபேறான தன்மை ஒரு முன்னுரிமையான அம்சமாக விளங்குகின்றது. சபுகஸ்கந்தவில் அமைக்கப்பட்டுள்ள எமது புதிய சூரிய சக்தி தொகுதி நிறுவலானது, சுற்றுச்சூழலில் எமது தாக்கத்தைக் குறைப்பதற்கும் நாட்டின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி இலக்குகளை ஆதரிப்பதற்குமான எமது முயற்சிகளில் ஒரு முக்கியமான படியாகும்.

இலங்கையின் நிலைபேறான எதிர்காலத்தை உரு வாக்குவதில் பங்களிப்பதில் தனியார் துறையின் முக்கிய பங்கை இந்தத் திட்டம் எடுத்துக்காட்டுகிறது” - என்றார்.

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2030 ஆம் ஆண்டுக்குள் முழுமையான Scope 1 & 2 பச்சை வீட்டு வாயு (GHG) வெளியீட்டை 100% குறைப்பதை அடைவதற்கான அங்கீகரிக்கப்பட்ட, விஞ்ஞான ரீதியிலான இலக்கை யுனிலீவர் நிறுவனம் கொண்டுள்ளது. 2039 ஆம் ஆண்டுக்குள் அதன் மதிப்புச் சங்கிலி முழுவதும் நிகர பூச்சிய மட்டத்திலான காபன் வெளியீட்டை அடைவது யுனிலீவர் நிறுவனத்தின் நீண்டகால இலட்சியங்களில் ஒன்றாகும்.

# UNDP - WFP Sri Lanka சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து ஆரம்பித்துள்ள இலங்கையில் அதிகம் அறியப்படாத உணவுகள் பிரசாரம்

இலங்கையில் பயன்படுத்தப்படாத பயிர் உணவுகளை ஊக்குவிப்பதற்காக சுற்றாடல் அமைச்சு, UNDP மற்றும் WFP ஆகியன இணைந்து விரிவான ஊக்குவிப்பு பிரசாரமொன்றை ஆரம்பித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் (WFP) ஆகியன சுற்றாடல் அமைச் சுடன் இணைந்து அதிக போஷணை நிறைந்த, குறைவான பயன்பாட்டைக் கொண்ட பாரம்பரிய பயிர் உணவுகளை தினசரி உணவுகளில் சேர்ப்பதை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான பிரசாரத் திட்ட மொன்றை ஆரம்பித்து வைத்துள்ளன.

இலங்கையின் அதிகம் அறியப்படாத உணவுகள் திட்டமானது, உயிர்ப் பல்வகைமை பாதிப்பு மற்றும் நாடு முழுவதும் உள்ள பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் போஷணை கொண்ட உணவுக்கான அணுகலை மேம்படுத்துதல் ஆகிய இரட்டைச் சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு பிரசாரத் திட்டமாகும். இந்த ஊக்குவிப்பு பிரசாரமானது Global Environment Facility (GEF) அமைப்பினால் நிதியளிக்கப்படுகின்ற Early Action Support (EAS) திட்டத்தின் மூலம் நேரடியாக ஆதரவளிக்கப்படுகிறது.

இது தேசிய கொள்கைகள் மற்றும் உத்திகளில் உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பை ஒருங்கிணைப்பதன் மூலம் உலகளாவிய உயிர்ப்பல்வகைமைக் கட்டமைப்பை இலங்கை செயற்படுத்துவதை விரைவுபடுத்து வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.



நேற்று (20) இடம்பெற்ற இந்தப் பிரசார நிகழ்வின் ஆரம்ப விழாவில் அமைச்சுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதோடு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) இலங்கைக்கான துணை வதிவிடப் பிரதிநிதி திருமதி மாலின் ஹெர்விக், உலக உணவுத் திட்டத்தின் (WFP) இலங்கைக்கான நாட்டுப் பணிப்பாளர் A.I. ஜெரார்ட் ரெபெல்லோ ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் இந்நிகழ்வில், சுற்றுலாத் துறை, கல்வித்துறை மற்றும் அடிப்படை மட்டத்திலுள்ள தொழில்முனைவோர் உள்ளிட்ட அரச, தனியார் துறையின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரசாரத் திட்டத்தின் முக்கிய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படாத போஷணை நிறைந்த பயிர்களைக் கொண்ட உணவுத் தயாரிப்பு செய்முறை புத்தகத்தை (Recipe) வடிவமைத்து விநியோகிப்பதும் அடங்குகின்றது.

உலக உணவுத் திட்டத்தின் (WFP) தேசிய ரீதியிலான பாடசாலை உணவுத் திட்டத்துக்கான உணவு வழங்குநர்களுக்கு உரிய கருவிகள், அது தொடர்பான அறிவு, சுயமாக உற்பத்தி செய்வதற்கான ஆதரவை வழங்கும். வீட்டில் தயாரிக்கப்பட்ட பாடசாலை உணவு (Home-Grown School Feeding - HGSF) திட்டத்தின் பங்கேற்பாளர்களாக உள்ளவர்களிடையே இந்தச் செய்முறை புத்தகம் விநியோகிக்கப்படும். இது பாடசாலைகளில் வழங்கப்படும் உணவுகளில் அதிகம் அறியப்படாத உணவுகளைச் சேர்ப்பதற்கு உதவும்.







# மீண்டும் பற்றியெரியும் லொஸ் ஏஞ்சல்ஸ்

## 9,400 ஏக்கர் நிலப்பரப்பை கபளீகரம் செய்த காட்டுத் தீ: 31,000 பேர் வெளியேற்றம்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மீண்டும் காட்டுத் தீ பரவத் தொடங்கியுள்ளது. கட்டுக்கடங்காது பற்றியெரிந்துவரும் காட்டுத் தீ சுமார் 9,400 ஏக்கர் நிலப்பரப்பை கபளீகரம் செய்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கிருந்து 31 ஆயிரத்துக்கு அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கலிஃபோர்னியா மாகாணத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் கடந்த 7ஆம் திகதி காட்டுத் தீ பரவத் தொடங்கிய நிலையில், இக்காட்டுத் தீயில் சிக்கி 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 12,000 கட்டடங்கள் உட்படப் பல கட்டுமானங்கள் சேதமடைந்துள்ளன. 1.80 இலட்சம் பேர் வேறு இடத்தில் தங்கவைக்கப்பட்டார்கள். 163 சதுர கிலோமீற்றர் பரப்பளவு தீக்கிரையானது. 200 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான பொருட்சேதம் ஏற்பட்டது.

இந்நிலையில், சற்றே தணிந்த காட்டுத் தீ தற்போது மீண்டும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளது. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் வடக்குப் பகுதியில் தீ பரவி வருகிறது. இப்போது மூண்டுள்ள காட்டுத் தீ 9,400 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து வருகிறது. இதனால் விண்ணை முட்டும் அளவுக்கு கரும்புகை சூழ்ந்துகொண்டுள்ளது.

இதற்கிடையே, காட்டுத் தீயை அணைக்கும் பணியில் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தீயணைப்பு வீரர்களும் பணியை முடுக்கிவிட்டுள்ளனர்.

**காரணம் என்ன?** - காஸ்டேயிக் ஏரியை ஒட்டிய பகுதியில் ஒரு சில மணி நேரத்துக்குள்ளேயே 5000 ஏக்கர் பரப்பளவில் காட்டுத் தீ பரவியுள்ளது. மீண்டும் இவ்வளவு வீரியமாகக் காட்டுத் தீ ஏற்படக் காரணம் இதுதான் என உறுதிப்படுத்தப்படவில்லை. இருப்பினும், காற்றில் குறைந்த ஈரப்பதம், பலமான காற்று ஆகியன மீண்டும் காட்டுத் தீ பரவக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் வீடுகளிலிருந்து பொருட்களை அள்ளிக்கொண்டு அவசர அவசரமாக புறப்படும் காட்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின. அப்போது ஒருவர், "என் வீட்டை இத் தீ கபளீகரம் செய்யாது என நம்புகிறேன். உயிருக்கு அஞ்சி இப்போது இடம்பெயர்கிறோம். மீண்டும் வரும்போது வீடு மிஞ்ச வேண்டும் என்று விரும்புகிறேன்" - எனத் தெரிவித்துள்ளார்.

# தென்அமெரிக்காவை வாட்டும் பனிப்புயல்

## 10 பேர் உயிரிழப்பு; டெக்சாஸ் - புளோரிடாவில் அவசர நிலை பிரகடனம்

தென் அமெரிக்காவில் வீசிய பனிப்புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. பனிப் புயலில் சிக்கி இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ள நிலையில், புளோரிடா, ஜோர்ஜியா, லூசியானா உள்ளிட்ட மாகாண ஆளுநர்கள் அவசர நிலையை அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மற்றும் வடக்கு வளைகுடா கடற்கரையில் அதிகமான பனிப்பொழிவை ஏற்படுத்திய பனிப்புயல் கிழக்கு நோக்கி நகர்ந்தது. இதன் காரணமாக புளோரிடா, ஜோர்ஜியா மற்றும் கிழக்கு கரோலினா உள்ளிட்ட பகுதிகளில் வரலாறு காணாதளவில் பனிப்பொழிவு பதிவாகியுள்ளது.

ஒன்றரை அடி உயரம் பனி குவிந்துள்ளதால் தெற்கு டெக்சாஸ் முதல் புளோரிடாவின் ஜாக்சன்வில்லே வரையிலான தென் அமெரிக்காவின் வீதிகள் மூடப்பட்டுள்ளன. பல இடங்களில் வெள்ளை போர்வை போர்த்தியது போல காட்சியளிக்கிறது. பனிப்பொழிவால் பாடசாலைகள், வணிக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. பனிப்பொழிவு அதிகமாகவுள்ள பகுதிகளில் மின்தடை செய்யப்பட்டுள்ளது. குளிரிலிருந்து மக்கள் தப்பிக்க அரசு சார்பில் குளிர்காயும் மையங்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், பனிப்பொழிவு காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

பனிப்பொழிவு நீடிப்பதால் சார்ஜியா, லூசியானா, மசிசிப்பி, அலபாமா, புளோரிடா மாகாண ஆளுநர்கள் அவசரகால நிலையை அறிவித்துள்ளனர். பனிப்பொழிவு கடுமையாக வீசியதால் டெக்சாஸ், லூசியானா உள்ளிட்ட நகரங்களில் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 2,200 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. லூசியானா மாகாணத்திலுள்ள நியூ ஆர்லியன்ஸ் நகரில் பனிப்பொழிவு 10 அங்குல உயரம் குவிந்து புதிய சாதனையை படைத்தது. இது கடந்த 1963ஆம் ஆண்டின் பனிப்பொழிவு சாதனையை முறியடித்ததாக அந்நாட்டின் தேசிய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

### பெப். 01 முதல் 25சதவீத வரிவிதிப்பு அமுல்:

# ட்ரம்பின் அறிவிப்புக்கு அடிபணிய மாட்டோம்!

## கனடா - மெக்சிகோ அதிரடி அறிவிப்பு



"கனடா, மெக்சிகோ ஆகிய நாடுகளுக்கு எதிர்வரும் பெப்ரவரி 01ஆம் திகதிமுதல் 25சதவீத வரிவிதிப்பு அமுல்படுத்தப்படும்'' என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ள நிலையில், இந்த அறிவிப்புக்கு, கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள் ''நாங்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டோம்'' என அறிவித்துள்ளன.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் பல அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். அந்தவகையில், ''எதிர்வரும் பெப்ரவரி 01ஆம் திகதிமுதல் மெக்சிகோ மற்றும் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25சதவீத அமெரிக்க அரசு வரிகளை அறிமுகப்படுத்துவது பற்றி யோசித்து வருகிறது'' - என்றார்.

ட்ரம்ப் இவ்வாறு கூறியதற்கு காரணம், மேற்கண்ட இரு நாடுகளின் வழியாக அமெரிக்காவுக்குள் பலர் சட்டவிரோதமாக குடியேறி வருவதாகவும் அவர்களை இரு நாடுகளும் தடுக்க தவறிவிட்டதாகவும் தெரிவித்து வருகிறார். இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அறிவிப்பு குறித்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அளித்த பேட்டியில்,

''புதியதாக பதவியேற்றுள்ள ட்ரம்ப் தனது வர்த்தக கூட்டாளிகளிடையே பொருளாதார நிச்சயமற்ற தன்மையை உருவாக்க முயற்சிக்கிறார். மற்ற நாடுகளை பலவீனப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்கிறார்கள். ட்ரம்பின் அறிவிப்புக்கு கனடா அடிபணியாது. புதிய வரிவிதிப்பை ஏற்க மாட்டோம். உண்மையில் ட்ரம்ப் ஒரு திறமையான பேச்சாளர். அவர் இவ்வாறு அறிவிப்பார் என்பது எங்களுக்கு தெரியும். தனது வர்த்தக




கூட்டாளர்களை பலவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக எதையும் செய்வார்'' எனத் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் கடுமையான வரிகளை விதித்தால், அதற்கான இழப்பீட்டை கனேடிய அரசு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஜவுளிப் பொருட்கள் மீது புதிய வரிகளை விதிக்க கனேடிய அரசு யோசித்து வருகிறது. இருப்பினும், அமெரிக்காவின் வரி விதிப்புக்கு கனடாவின் பதிலடியானது கனடாவுக்கு தேவையற்ற பொருளாதாரச் சுமையாக மாறிவிடும் என்கின்றனர்.

இதேவேளை, மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பா தெவிக்கையில், ''அமைதியான முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும். வார்த்தை ஜாலங்களை கண்டு ஏமாற வேண்டாம். ஏற்கனவே கையெழுத்திடப்பட்ட உத்தரவுகளுக்கு முன்னுரிமை அளிப்பதும் முக்கியம்'' - என்றார்.

# சீமான் - பிரபாகரன் புகைப்பட சர்ச்சை; பேசுபொருளான நடிகர் ராஜ்கிரண் பதிவு





"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சீமான் இருப்பது போன்ற புகைப்படத்தை எடிட் செய்ததே நான் தான்'' என்று இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் தெவித்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கட்சித் தொடங்கியதிலிருந்தே பல்வேறு சர்ச்சைகளில் சிக்கி வருகிறார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கொள்கைத் தலைவனாகக் கொண்டு செயற்படும் இவர், அவரை சந்தித்தது குறித்து தொடர்ந்து மேடைகளில் பேசி வந்தார். அப்போதே பலர் சீமான் கூறுவதெல்லாம் பொய் என்றெல்லாம் விமர்சித்தனர். இந்த விவகாரங்கள் அரசியல் வட்டாரத்தில் விவாதமானது. இந்நிலையில் தான் சமீபத்தில் பெரியார் குறித்தும் அவரின் கொள்கைகள் குறித்தும் கடும் விமர்சனங்களை முன்வைத்து சீமான் மீண்டும் சர்ச்சையில் சிக்கினார்.

இதனால், பல அரசியல் தலைவர்களும் சீமானுக்கு கண்டனங்கள் தெரிவித்து வந்தனர். இதற்கிடையில்தான் இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார், சீமான் பிரபாகரனை சந்திக்கவே இல்லை. எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால், அந்தப் புகைப்படத்தை எடிட் செய்து கொடுத்தவர் என்கிற அடிப்படையில் என எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த சர்ச்சை குறித்து பேசிய சீமான், ''பெரியாரைப் பற்றி நான் தொடர்ந்து பேசி வருவதால் எங்கள் தலைவர் பிரபாகரனோடு நான் எடுத்த படம் எடிட் செய்யப்பட்டது என்கிற அவதூறை பரப்பி வருகிறார்கள்.

15 ஆண்டுகளுக்கு முன்பே பிரபாகரனோடு நான் எடுத்த படம் வெளியாகிவிட்டது. இப்போது எடிட் செய்து கொடுத்ததாக சொல்லும் நபர் இவ்வளவு நாட்களும் என்ன செய்து கொண்டிருந்தார்'' என்று தெரிவித்தார்.

இதனையடுத்து ''ஆதாரத்துக்கு ஓர் ஆதாரம் தேவையா'' என சீமானுக்கு இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.

சீமான் - பிரபாகரன் புகைப்பட சர்ச்சை எழுந்துள்ள நிலையில் நடிகர் ராஜ் கிரண் பதிவிட்டுள்ள பேஸ்புக் பதிவு இணையத்தில் பேசுபொருளாகியுள்ளது.

அவரது பதிவில், ''நான் ஒரு நடிகன் என்பதால், என்னை வைத்து திரைப்படம் தயாரிப்பதற்காக என்று சிலரும் என்னை வைத்து திரைப்படம் இயக்குவதற்காக என்று சிலரும் என் அபிமானிகள் என்றும் என் தீவிர ரசிகர்கள் என்று பலரும் என்னுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வதென்பது, சாதாரணமாக நடக்கும் விடயம்.

இம்மாதிரியான புகைப்படங்களை வைத்துக்கொண்டு, என் சொந்தக்காரர்கள் என்றோ, எனக்கு மிகவும் வேண்டியவர்கள் என்றோ கூறிக்கொண்டு, யார் என்ன காரணத்துக்காக உங்களை அணுகினாலும் அவர்களிடம் மிகக் கவனமாக இருங்கள். என்னிடம், யார் சிபாரிசும் எடுபடாது. என் விடயங்களில், நான் மட்டுமே முடிவெடுக்கிறேன். என்னுடன் இருக்கும் புகைப்படங்களை வைத்துக்கொண்டு, கதைகள் பல சொல்லி, யாரும் யாரையும் ஏமாற்றிவிடக்கூடாது என்பதற்காகவே, இந்தப்பதிவு'' என்று தெரிவித்துள்ளார்.

## நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில்....

# அசமந்தப் போக்கில் அரச பஸ் சேவை

### உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை






டி.சந்ரு செ.திவாகரன்

நுவரெலியா -தலவாக்கலை பிரதான வீதியில் காலை வேளை உரிய நேரத்துக்கு பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் அங்கிருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் தொழிலுக்குச் செல்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் பாடசாலை மாணவர்கள் மிதிபலகையில் வெளியில் தொங்கியபடி பயணம் செய்கின்றனர்.

இவ்வீதியில் தினமும் சேவையிலிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் தொழில்புரியும் சாரதியோ அல்லது நடத்துநரோ திடீர் விடுமுறை பெறுவதும் மற்றும் விடுமுறை நாட்களில் சேவையில் ஈடுபடும் பஸ்களும் திடீரென முற்றாக நிறுத்தப்படுவதும் மக்களுக்குப் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

அதேவேளை, பஸ்ஸில் ஏதேனும் பழுது ஏற்படும் சமயத்திலும் பஸ்கள் நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இதனால் அவற்றில் தினமும் பயணிக்கும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், அன்றாட தொழிலுக்குச் செல்வோர் அவதிப்படுகின்றனர்.

குறிப்பாக, கிலாரண்டன், டெஸ்போட், கிரிமிட்டி, வாழைமலை, அவோக்கா, கார்லிபேக் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே போக்குவரத்துச் சிக்கலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இந்த பஸ்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளமையால், காலை 6.30 மணிக்கு தலவாக்கலையிலிருந்து நுவரெலியா நோக்கிப் புறப்பட்டு, காலை 7.20 மணியளவில் டெஸ்போட், கிரிமிட்டி வழியாகச் செல்லும் பஸ்ஸில் மக்கள் தொகை அதிகமாக நிரம்பிக் காணப்படுவதாகவும் அதில் ஏறி பயணம் செய்ய இயலாத நிலை ஏற்படுவதாகவும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இ.போ.ச. பஸ்களுக்கான மாதாந்த பருவச்சீட்டு பெற்றுக்கொண்டவர்கள் முச்சக்கரவண்டிகள் மற்றும் வேறு வாகனங்களில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதில் கிலாரண்டன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் நானுஓயா பிரதான நகருக்கும் நானுஓயா நாவலர் பாடசாலைக்கும் மூன்று நான்கு கிலோமீற்றர் தூரம் நடந்தே செல்கின்றனர். இதனால் உரிய நேரத்தில் பாடசாலைக்கோ அலுவலகங்களுக்கோ செல்ல முடியாமல் மீண்டும் தமது வீடுகளுக்கே செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வீதியில் காலையில் உரிய நேரத்துக்கு அரச பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கு தெரியப்படுத்தியும் ஊடகங்களில் பல்வேறு தடவைகள் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டும் இதுவரை இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே காணப்படுகிறதெனவும் பெற்றோர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, இப்பிரதேச மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பாடசாலை நேரங்களில் சீரான பஸ் சேவையை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கண்டியில் நிலவும் சுகாதார பணியாளர்கள் பற்றாக்குறை

### முறையற்ற இடமாற்றமே காரணம் என்கிறார் வைத்தியர் சேனக தலகல

எம்.ஏ.அமீனுல்லா

கண்டி மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலை களில் சுகாதாரப் பணியாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாகவும் தொழிற்சங்கங் களின் முறையற்ற தலையீடுகள் காரணமாக தற்போதுள்ள ஊழியர்களை சமச்சீர் முறையில் வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் கண்டி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சேனக தலகல தெரிவித்துள்ளார்.

சில தாதியர் சங்கங்களின் தலையீடு காரணமாக குறிப்பாக தாதியர் சேவையில் முறையான இடமாற்றங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்தியர் சேனக தலகல இந்தத் தகவல்களை வெளிப்படுத்தினார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் கே. டி லால்காந்த மற்றும் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன் ஆகியோரின் இணைத் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

கண்டி மாவட்டத்திலுள்ள சில வைத்தியசாலைகளில் தாதிமார்கள் மேலதிகமாகக் காணப்படுகின்ற போதிலும் பல வைத்தியசாலைகளில் ஒரு தாதி கூட இல்லையென அவர் மேலும் குறிப்பிட்டார்.

***இங்கு கருத்து தெரிவித்த சுகாதார மற்றும் வெகுஜன ஊடகப் பிரதி அமைச்சர் ஹசங்க விஜேமுனி,***

முறையான இடமாற்ற முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டால் எந்தவொரு தொழில்சார் சங்கமும் முறையற்ற வகையில் தலையிட முடியாது.மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கம் அவ்வாறான தலையீடுகள் நடைபெறாமல் இருப்பதை உறுதிசெய்யும்.

தொழிற்சங்கம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்களின் நலன் மற்றும் உரிமைகளுக்காக தொழிற்சங்கங்கள் செயற்படுவது சாதாரண விடயம். எனினும், அரச சேவைக்கு இடையூறாக ஊழியர்களின் இடமாற்றத்தை நிறுத்துவதற்கு தொழிற்சங்கங்களுக்கு உரிமையில்லையென பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

கண்டி மாவட்டத்தில் 76 வைத்தியர்கள் பற்றாக்குறை யாகக் காணப்படுவதுடன் ஒரு வைத்தியர் பணிபுரியும் சில உள்ளூர் வைத்தியசாலைகளில் குறித்த வைத்தியர் விடுமுறையில் செல்லும்போது அங்கு, வைத்தியர் இல்லாத பிரச்சினை காணப்படுவதாகவும் மத்திய மாகாண சுகாதார செயலாளர் ஜகத் தெரிவித்தார்.

# லொறி குடை சாய்ந்து விபத்து



ராமு தனராஜா

கொழும்பிலிருந்து பதுளைக்கு தரையோடுகளை ஏற்றிச்சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளானதில் சாரதி காயமடைந்துள்ளார்.

பண்டாரவளை தெமோதர பகுதியில் நேற்றுக் காலை (23) இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த லொறி கொழும்பிலிருந்து பதுளைக்கு தரையோடுகளை ஏற்றிக்கொண்டு பயணித்தபோது தெமோதர பகுதியில் புகையிரத நிலையத்துக்குச் செல்லும் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இதன்போது லொறியிலிருந்து சிதறி விழுந்த தரையோடுகள் தெமோதர புகையிரத நிலையத்துக்குச் செல்லும் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சில முச்சக்கரவண்டிகள் மற்றும் லொட்டரி விற்பனை நிலையமொன்றின் மீதும் விழுந்துள்ளன. இதனால் அவை சேதமடைந்துள்ளன.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





*மாத்தளை மாவட்ட செயலக காரியாலயத்தின் ஏற்பாட்டில் தேசிய பொங்கல் விழா மாவட்ட செயலக வளாகத்தில் 22 நேற்று வெகுவிமர்சையாக நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தே ஜானி திலகரத்ன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபையினர் மற்றும் சுபீட்சம் சமூக சேவை உறுப்பினர்கள் மாத்தளை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் சங்கீதா, மாவட்ட மேலதிக செயலாளர் ரிஸ்மினா ரியால்டீன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(யடவத்த செய்தியாளர் )*

# மருதானை பொலிஸ் நிலையத்தில் பெண் தற்கொலையா? உண்மைநிலை உடனடியாகக் கண்டறியப்படவேண்டும்

### தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் கோரிக்கை

பு.கஜிந்தன்



மருதானை பொலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லப்படும் தமிழ்ப் பெண்ணின் மரணம் தொடர்பான உண்மைகள் உடனடியாக வெளிக்கொணரப்படவேண்டும் - என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் பெண்ணின் தற்கொலை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தச் செய்திக்குறிப்பில்,

கிளிநொச்சியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப் பட்டிருந்தபோது நேற்று முன்தினம் (22) புதன்கிழமை இறந்துள்ளார்.

மருதானை பொலிஸார் இம்மரணத்தைத் தற்கொலை என்று தெரிவித்துள்ளதோடு, கஞ்சா வைத்திருந்ததாலேயே கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

செய்தியறிந்து சடலத்தைப் பார்வையிட்ட தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இம்மரணம் தொடர்பாகச் சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

காலாகாலமாக இலங்கையில் பொய்க் குற்றச்சாட்டுகளைச் சோடித்து வந்துள்ள நிலையில், பொலிஸ் நிலைய மரணம் தொடர்பான உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவதற்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். பல்கலையில் 'த நெயில்' (The Nail) சஞ்சிகை வெளியீடு!



பு.கஜிந்தன்




யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியில் உருவான 'த நெயில்' (The Nail) சஞ்சிகை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை (23) இடம்பெற்றது.

இந்நிகக்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகவும் வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பெற்றிக் டிறஞ்சன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

ஆளுநர் தனது உரையில்,

''முன்னைய காலங்களில் பொறியியலாளர்கள் பலர் இந்த மாகாணத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைத்திருந்தாலும் அவர்களின் அந்தக் கடின உழைப்புப்பற்றிய எந்தவொரு ஆவணங்களும் எங்களிடம் இல்லை.

நாங்கள் அன்று தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்ற அடிப்படையில் ஆறுமுகம் திட்டம் தொடர்பில் பேசி வந்தாலும், அது தொடர்பில் முறையான – முழுமையான ஆவணங்கள் எங்களிடம் இல்லை.

ஆனால், தற்போது வெளியிடப்படும் 'த நெயில்' சஞ்சிகை ஊடாக பொறியியலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அனுபவங்கள் அனைவருக்கும் பகிரப்படுகின்றன. இது சிறப்பான முயற்சி. பாராட்டப்படவேண்டியது.சவால்களை எதிர்கொள்ளாவிட்டால் எங்களின் ஆளுமையை விருத்திசெய்ய முடியாது. சவால்களை எதிர்கொள்ளும்போதுதான் அந்தச் சவால்களை நாங்கள் வெற்றிகொள்கின்றோம். அதனூடாக எங்கள் ஆளுமைகளை மேலும் விருத்தியடையச் செய்யலாம். மிகப் பரந்துபட்ட அனுபவமானது எழுத்துமூலமான போதனையைவிட மேம்பட்டது.

மாணவர்களின் புத்தாக்க சிந்தனைக்கும் இடமளிக்கும் வகையில் அவர்களுடைய ஆக்கங்களையும் இந்த சஞ்சிகையில் உள்வாங்கியமை சிறப்பம்சமாகும். புத்தகக் கல்விக்கப்பால் பரிசோதனைகள் - பயிற்சிகள் மாணவர்களுக்கு முக்கியம். அது இல்லாமல் அவர்களது அறிவு முழுமையடையாது'' – என்றார்.

# யாழ். மாவட்ட செயலகத்தில் வரவில் சிறந்த உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு






பு.கஜிந்தன்




யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் வரவில் சிறந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வரவை ஒழுங்காகக் கடைப்பிடிக்கும் கிளைகளுக்கான பாராட்டுச் சான்றிதழ் நேற்று முன்தினம் (22) அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் வழங்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் கார்த்திகை மாதம் வரையிலான காலப்பகுதியில் வரவில் சிறந்த உத்தியோகத்தர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மேற்படி காலப்பகுதியில் காலை 08.30 மணிக்கு முன்னர் 100% உத்தியோகத்தர்களின் வரவை ஒழுங்காகக் கடைப்பிடித்த கிளைகளின் தலைவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி (JITF) இன்று ஆரம்பம்

கடந்த 14 ஆண்டுகளாக குடாநாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற புகழ்பெற்ற யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இம்முறையும் 15ஆவது தடவையாக யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் 300க்கும் மேற்பட்ட விற்பனையகங்கள் ((Stall) நிறுவப்பட்டு, அவற்றின் மூலம் நாடுபூராவுமுள்ள பல்வேறுபட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் வலுப்படுத்தப்படவுள்ளன.

புகழ்பெற்ற கண்காட்சி ஏற்பாட்டாளர்களான இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் நிறுவனம் (LECS) ஏற்பாடு செய்துள்ள இந்த சர்வதேச வர்த்தக நிகழ்வு இன்று 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி நிலைபேண்தகு வலுசக்தித் தீர்வுகள், நிர்மாணத்துறை, நுகர்வோர் உற்பத்திகள், பிரயாண மற்றும் சுற்றுலாத்துறை, உணவு மற்றும் குடிபானங்கள், பொதியிடல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், கல்வி, வாகனங்கள், விவசாயம், ஆடையுற்பத்தி, விருந்தோம்பல், நிதிச் சேவைகள், முற்றுமுழுதான ஆரோக்கியம் அத்துடன், சுகாதாரக் கவனிப்பு போன்றவகையிலான வணிகங்கள், உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான தன்னிகரற்ற வாய்ப்புகளுக்குரிய களமொன்றாக வடமாகாணத்தை மாற்றுகின்றது.

மேலும், இக்கண்காட்சி, புதிய வணிகங்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கும் பழைய கம்பெனிகள் மேலும் அங்கீகாரம் பெறுவதை இலகுபடுத்துவதற்கும் உதவுகின்ற முக்கிய வணிகநாம விழிப்புணர்வு அங்குரார்ப்பணத் தளங்களுள் ஒன்றாகவும் பார்க்கப்படுகின்றது.

# பருத்தித்துறை மரக்கறிச் சந்தை தொடர்பான வழக்கு 31ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

பு.கஜிந்தன்



பருத்தித்துறை மரக்கறிச் சந்தை தொடர்பான வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை புதிய கட்டிடத்துக்கு இடம் மாற்றுவது தொடர்பில் மரக்கறி வியாபாரிகளால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 16/01/2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம் நேற்று முன்தினம் (22) வரை புதிய கட்டிடத்துக்கு மரக்கறிச் சந்தையை இடமாற்றம் செய்ய பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், நேற்று (23) வழக்கு இடம்பெற்றது.

குறித்த வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 31ஆம் திகதி வரைக்கும் மரக்கறிச் சந்தை வழமையாக தற்போது இயங்கி வருகின்ற இடத்தில் இயங்க முடியும்.

இவ்வழக்கில் முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆஜராகினார்.

# கோப்பாய் மாணவி மீது பாலியல் துன்புறுத்தல்: ஆசிரியர் கைது

பு.கஜிந்தன்

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலையொன்றில் கல்வி பயிலும் மாணவியை பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய ஆசிரியரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த 17ஆம் திகதி 13 வயதுடைய குறித்த மாணவியை அதே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 52 வயதுடைய ஆசிரியர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக நேற்று முன்தினம் (22) கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், சம்பவம் குறித்து நடவடிக்கைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரான ஆசிரியரை நேற்று (23) கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஸ் கிண்ண பாதுகாப்புப் பணியில் 17 ஆயிரம் பேரை களமிறக்கும் பாகிஸ்தான்



ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகும் நிலையில், மைதானம், அணிகளின் வீரர்கள் தங்கும் ஹோட்டல் உள்ளிட்டவற்றில் 17 ஆயிரம் பாதுகாப்பு படையினரை பணியில் ஈடுபடுத்த பாக். அரசு திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தானில் கராச்சி, லாகூர், ராவல்பிண்டி ஆகிய மூன்று இடங்களில் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. லாகூர் மற்றும் ராவல்பிண்டியில் நடைபெறும் போட்டிகளுக்கு பாதுகாப்பு வழங்குதல், போட்டியில் பங்கேற்கும் அணிகள் தங்கும் ஹோட்டல்கள் மற்றும் வீரர்கள் மைதானத்துக்கு செல்லும் இடங்கள் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான பணிகளை பஞ்சாப் மாகாண அரசு தொடங்கியுள்ளது.

போட்டிகள் மற்றும் பங்கேற்கும் அணிகளுக்காக பஞ்சாப் அரசு 12,500 பாதுகாப்பு படையினரை பணியில் ஈடுபடுத்த இருக்கிறது. சிறப்பு கமாண்டர்கள் உட்பட 7,600 பொலிஸார், பாதுகாப்பு அதிகாரிகள் லாகூரில் நடைபெறும் போட்டிகளுக்காக பணியமர்த்தப்பட இருக்கிறார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

411 சிறப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் உட்பட 4,500 பொலிஸார் ராவல்பிண்டியில் பாதுகாப்பை மேற்பார்வையிட இருக்கிறார்கள். தேவைப்பட்டால் இராணுவ உதவியுடன் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் மற்றும் வான் பாதுகாப்பு மூலம் போட்டிகள் கண்காணிக்கப்படும். பொலிஸாருடன் துணை இராணுவ ரேங்கில் உள்ள அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கராச்சியில் நடைபெறும் போட்டிகளுக்காக குறைந்தபட்சம் 05 ஆயிரம் அல்லது அதற்கு அதிகமான வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என சிந்து பொலிஸ்துறைக்கான செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி விளையாடும் போட்டிகள் டுபாயில் நடைபெறவுள்ள நிலையில், இந்திய அணி தகுதி பெறுவது பொறுத்து அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறுவது முடிவு செய்யப்படும். லாகூர் மற்றும் ராவல்பிண்டி பஞ்சாப் மாகாண எல்லையிலும் கராச்சி சிந்து மாகாண எல்லையிலும் உள்ளன. இந்த பஞ்சாப் மற்றும் சிந்து மாகாண அரசுகள் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள இருக்கின்றன.

# மாற்றுத் திறனாளிகளுக்கான சம்பியன்ஸ் கிண்ணம் இந்தியா வசம்




மாற்றுத் திறனாளிகளுக்கான சம்பியன்ஸ் கிண்ண இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்திய இந்தியா சம்பியன் பட்டம் வென்றது.

இலங்கையில் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான குறித்த மாற்றுத் திறனாளிகளுக்கான சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடர் செவ்வாய்க்கிழமை நிறைவடைந்தது. இறுதிப்போட்டியில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 04 விக்கெட்டுகளை இழந்து 197 ரன்கள் எடுத்தது. 198 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி, 19.2 ஓவர்களின் முடிவில் 118 ரன்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க இந்திய அணி 79 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

# இங்கிலாந்தை இலகுவாக வீழ்த்திய இந்தியா



கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 05 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி 07 விக்கெட்டுகளினால் அபார வெற்றியீட்டியது.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியில் அதன் தலைவர் ஜொஸ் பட்லர் மட்டுமே தனியாளாக போராடினார். அவர் 68 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் இங்கிலாந்து அணி 132 ரன்கள் எடுத்தது.

குறித்த இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு அபிஷேக் ஷர்மா 34 பந்துகளில் 08 சிக்ஸர்கள் 05 பவுண்டரிகளுடன் 79 ரன்கள் குவித்து வெற்றிக்கு வித்திட்டார். இறுதியில் 12.5 ஓவர்களில் 03 விக்கெட்டுகளை இழந்து 133 ரன்கள் எடுத்து 07 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது போட்டி நாளை (25) சென்னையில் நடைபெறுகிறது.

# மார்ச் மாதத்துக்குள் புதிய பதக்கங்கள் வழங்கப்படும்



பாரிஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளில் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட பதக்கங்கள் பொலிவை இழப்பதாக பதக்கங்களை வென்ற வீர, வீராங்கனைகள் தெரிவித்துள்ள நிலையில், எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் புதிய பதக்கங்களைத் தயார் செய்யவுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பிரான்ஸில் நாணயங்களை அச்சிடும் மொனாய் டி பாரிஸ் எத்தனை பதக்கங்களைப் புதிதாகச் செய்து தரப் போகிறது என்பதை குறிப்பிடவில்லை. 100க்கும் அதிகமான பதக்கங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று லா லெட்ரே எனும் உள்நாட்டு ஊடகம் கூறுகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் கடந்த ஆண்டு ஜூலை 26ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 11ஆம் திகதி வரை நடந்தன. போட்டிகளில் மொத்தம் 5,084 பதக்கங்கள் வழங்கப்பட்டன. ஓகஸ்ட் மாதத்திலிருந்தே பதக்கங்களை மாற்றித் தரும்படி வீரர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்ததாக அதிகாரிகள் கூறினர். வீரர்கள் சிலர் சமூக ஊடகத்தில் பதக்கங்களின் படங்களைப் பதிவேற்றம் செய்தனர். பதக்கங்கள் பொலிவை இழந்திருப்பதையும் சில இடங்களில் சாயம் மறைந்திருப்பதையும் காணமுடிகிறது.

# விளையாட்டுத் துளிகள்



★ ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்ட மகளிருக்கான ரி20 உலகக்கிண்ணத் தொடரின் மலேசியாவுடனான ஆட்டத்தில் 05 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்தியாவின் வைஷ்ணவி சர்மா 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ண வரலாற்றில் ஹெட்ரிக் விக்கெட் எடுத்த முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்தார். மேலும், போட்டி வரலாற்றிலேயே சிறந்த பந்துவீச்சாகவும் (05 விக்கெட்டுகள், 05 ரன்கள்) அவரது பந்துவீச்சு பதிவானது.



★ ரி20 சர்வதேச போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரர் யுஸ்வேந்திர சாஹலின் சாதனையை அர்ஷ்தீப் சிங் முறியடித்தார். 61 போட்டிகளில் விளையாடிய அர்ஷ்தீப் சிங் 97 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். 80 போட்டிகளில் விளையாடிய யுஸ்வேந்திர சாஹல் 96 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.




★ விராட் கோஹ்லி 12 ஆண்டுகளின் பின்னர் முதல் முறையாக முதல் தர கிரிக்கெட் போட்டியான ரஞ்சி தொடரில் ஆட வுள்ளார். எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்ப மாகும் ரெயில்வேஸ் அணிக்கு எதிரான கடைசி குழுநிலை போட்டியில் அவர் டெல்லி அணிக்காக ஆடவுள்ளார். கோஹ்லி கடைசியாக 2012–13 ரஞ்சி பருவத்தில் முதல்தர போட்டியில் ஆடியிருந்தார்.



★ இங்கிலாந்து அணிக்கு எதிரான ரி20 போட்டியில் அபிஷேக் ஷர்மா அபிஷேக் ஷர்மா 20 பந்துகளில் அரைசதம் கடந்ததன் மூலம் அவ்வணிக்கு எதிராக வேகமாக அரைச்சதம் கடந்த 2ஆவது வீரராக வரலாற்றில் இடம்பெற்றார். முன்னதாக கடந்த 2007இல் இங்கிலாந்துக்கு எதிராக யுவராஜ் சிங் 12 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.



★ டெல்லியில் நடைபெற்ற இந்திய ஓபன் சுப்பர் 750 பெட்மின்டன் சம்பியன்ஷிப் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் டென்மார்க்கின் ஆக்செல்சன் 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில் தென்கொரியா வின் ஆன் சே-யங் சம்பியன் பட்டம் வென்றார்.



★ நடப்பு இன்டர்நெஷனல் ரி20 லீக் தொடரில் இங்கிலாந்து வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் 2,000 பவுண்டரிகளை கடந்த நிலையில் ரி20 கிரிக்கெட்டில் 2,000 (1,461 ஃபோர், 540 சிக்ஸ்) பவுண்டரிகளை கடந்த இரண்டாவது கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன் கிறிஸ் கெயில் மட்டுமே ரி20 போட்டிகளில் 2000க்கும் அதிகமான (1,132 ஃபோர், 1,056 சிக்ஸ்) பவுண்டரிகளை அடித்த வீரராக இருந்தார்.

# கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடர்

***(எம். நஸார்)***




கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை (26) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே அங்கம்பிட்டிய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர்களைக் கொண்ட 06 அணிகள் கலந்துகொள்ளும் இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து கொள்ளவுள்ளார்.

அரசியல் கட்சித் தலைவர்கள், வீரர்கள், கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்க உறுப்பினர்களின் குடும்பத்தினர் உட்பட பெருந்தொகையான மக்களின் பங்கேற்புடன் இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் நேர்ச்சர் விளையாட்டுக் கழகத்தின் நீச்சல் போட்டிகள்



***(எம்.யூ.எம்.சனூன்)***

புத்தளம் நேர்ச்சர் விளையாட்டுக் கழகத்தில் நீச்சல் பயிலுகின்றவர்கள் கலந்துகொண்ட நீச்சல் போட்டிகள் அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் இடம்பெற்றது.

120 போட்டியாளர்கள் கலந்துகொண்ட இப்போட்டிகளில், வயது அடிப்படையில் முறையே வயது 08 இன் கீழ் மற்றும் 10, 12, 14, 16, 18 மற்றும் 18 க்கு மேல் திறந்த பிரிவுகளில் நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நேர்ச்சர் விளையாட்டுக்கழகத் தலைவரும் நீச்சல் பயிற்றுவிப்பாளரும் தேசிய நீச்சல் பயிற்சியாளர் சங்கத்தின் உறுப்பினருமான ஏ.எல்.எம்.ஹிஷாம்கான் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்வின் அதிதிகளாக இம்ரான் சொப்ட்வெயார் சொலுஷன், ஐ மீடியா நெட்வேர்க்ஸ் நிறுவனங்களின் பணிப்பாளர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத், கராத்தே போதானாசிரியரும் தலைவரும் தேசிய கராத்தே போட்டி நடுவருமான சிஹான் எம்.பைரூஸ் மற்றும் நேர்ச்சர் விளையாட்டுக் கழக பொருளாளர் எம்.எம்.முர்ஷித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டி நடுவர்களாக அஜ்மல் ரஜாப்தீன், தில்சான் சிராஜ், அதீப் ஹசன், அஸ்ஹர் ஹூசைன் ஆகியோர் பணியாற்றியதோடு, நிகழ்ச்சி தொகுப்பாளராக ஹிசாம் ஹூசைன் கடமையாற்றினார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7